# சத்திய வேத பாதுகாவலன்

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA. | 1876,ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது | Telephone: No. 300.

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

82-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1957-ம் ஆண்டு ஆனிமாதம் 27ந்- திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 24-ம் இலக்கம்


# அங்கும் இங்கும்

## முழுமனதோடு ஆதரிப்போம்

"வள்ளுவர்மரபிலே வந்தநாம் தற்போதுதோன்றியுள்ள மொழியுரிமையையிட்டுத் திட்டவட்டமாகக் கூறுதவிட்டால் வள்ளுவர்ஆவி நம்மைச்சபிக்கும். ஆகவே, நாம்எல்லோரும் மொழியுரிமைப்போராட்டத்தை முழுமனதோடுஆதரிப்போம்."

திரு. க. முருகேசு ஆசிரியர்,
சிறுபான்மைத் தமிழர்மகாசபையின்
முன்னைநாள் தலைவர்

## பிற்போக்கானசட்டம்

"சிங்களம்மட்டும்சட்டம் சுத்தபிற்போக்குச்சட்டம். முழுக்கமுழுக்க அது வகுப்புவாத அடிப்படையைக் கொண்டது. இந்தஅடிப்படையில் நாடுஒருபோதும் முன்னேறமுடியாது. இன்று ஆட்சிக்குவந்திருக்கும் மக்கள் ஐக்கியமுன்னணிஆட்சி கடந்தபதினைந்துமாத காலத்தில் செய்தது என்ன? ஒன்றுமே செய்யவில்லை. எல்லாம் பேச்சளவில்தான் இருக்கிறது. உள்நாட்டுப்பிரச்சினைகள் ஒன்றுகூடத் தீர்க்கப்படவில்லை."

திருமதி விவியன் குணவர்த்தனு,
எம். பி.

## ஜனப் மௌலானுவின் சவால்

"கேற்முதலியார் காரியப்பர், ஜனுப் எம். எம். முஸ்தப்பா என்பவர்கள் சமஷ்டிக்கட்சியைவிட்டுப் பிரிந்து போய்விட்டார்கள். எனினும், கீழ்மாகாணத் தமிழ்ப்பேசும்மக்கள் சமஷ்டிக்கட்சியை ஆதரிக்கிறுர்கள். இதை நிரூபிக்கவேண்டுமானுல் அவர்கள் தங்கள்பதவிகளை இராசிநாமாச்செய்துவிட்டு என்னுடன்போட்டியிட்டுப் பார்க்கட்டும். நிச்சயமாக அவர்களைத் தோற்கடிப்பேன். இன்று மூன்று முஸ்லீம்பிரதிநிதிகளைத் தெரிவுசெய்த கீழ்மாகாணம் அரசாங்கத்தின் சிங்களகுடியேற்றதிட்டக்கொள்கை மேலும் நீடித்தால் முஸ்லீம்பிரதிநிதிகளையே தெரிவுசெய்தனுப்ப முடியாமற் போய்விடும்."

ஜனுப் மசூர் மௌலானு

## ஒருவரிதானும் மாற்றமில்லை

"மக்கள்ஐக்கியமுன்னணி அரசாங்கத்தைக்கவிழ்க்கவிரும்புகின்றசிலசக்திகள் செல்வநாயகம்போன்றருக்கு உதவிபுரிகின்றன. பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள சிங்களம்மாத்திரம்சட்டத்தின் ஒருவரியைத்தானும் அரசாங்கம் மாற்றப்போவதில்லை."

திரு. ஏ. பி. ஜயசூரியா,
உள்நாட்டுமந்திரி.

## இன்றுகொடுப்பதுசலுகையா ?

"பல்லாயிரம்ஆண்டுகளாக உரிமையுடன்வாழ்ந்த தமிழ்ப்பேசும்மக்களுக்கு இந்நாட்டில் இன்றுவாழ உரிமையில்லையா? சிறுபான்மையினர் என்றாலும் இவர்கள் இந்நாட்டுமக்கள். இந்நாட்டின் உரிமையுள்ளபிரசைகள். இப்படியாகப் பிறப்புரிமைபெற்ற இனத்துக்கு இன்றுகொடுப்பது சலுகையா? இதற்குநாம் ஒருப்படமாட்டோம். இது நீதியுமில்லை. நியாயமுமில்லை. இந்நாட்டிலே ஏனையமக்களைப் போன்று சரிநிகர்[illegible]ானமாகச் சுதந்திரமக்களாய் அவர்கள்வாழவேண்டும். இதற்காக நாம்போராடுவோம்."

திரு. எட்மன்ட் சமரக்கொடி,
தெஹியோவித்தை, எம். பி.

## 'குளுக்கோஸ்' அரசாங்கம்

"மொழியை ஆயுதமாக்கி நாட்டைப் பிரிக்க நாம் எண்ணவில்லை. அரசாங்கமே இதைச் செய்கின்றது. தொழிலாளர் உண்ணுவிரதமிருந்தால் அவர்களைக்கவனிப்பார் எவருமில்லை ஆனுல், இராஜரத்தினுவும், ஜயசூரியாவும் ஒருநாள் உண்ணுவிரதமிருந்தால் குளுக்கோஸ் கொடுக்கிறது. என்ன குளுக்கோஸ்அரசாங்கம் ஐயா இது!"

திரு. ரொபேட் குணவர்த்தனு,
கோட்டே, எம். பி.

## புதைத்த இடங்களில் மரங்கள்

"சிங்களம்மட்டும் சட்டம் நிறைவேறியிராவிட்டால் எம்மைப்புதைத்த இடங்களில் மரங்கள் இன்று வளர்ந்திருக்கும் என்ருர் உணவு மந்திரி. வகுப்புவாதத்தை ஓர்காலத்தில் தோழர்பிலிப் (உணவுமந்திரி) எதிர்த்து நின்ருர். இன்று வகுப்புவாதத்துக்குத் தூப[illegible]போடுகிருர். எனவே, பழையலட்சியங்களை நினைவுபடுத்தி வகுப்புத்துவேஷத்தை எதிர்க்கவரும்படி அவரைக்கேட்கின்றேன்."

திரு. பேர்ணுட் சொய்சா,
கொழும்புத்தெற்கு, எம். பி.

## நியாயமாகப் பாவிக்குஞ்சலுகை

"ஏதோநம்நாட்டில் தமிழைஉபயோகிப்பது நியாயமில்லாத சாதனையென்றும் அதற்கு ஓரளவுக்கு நியாயமாகப்பாவிக்குஞ் சலுகையைவழங்க அரசாங்கம் [illegible]ட்டமிட்டிருக்கிறதென்றும் மக்கள்[illegible]ண்ணத்தக்கதாகச் சிங்களத்தலைவர்க[illegible] நடந்துகொள்வதைப் பார்த்து நாம்[illegible]சனிக்கின்ருேம்."

திரு.[illegible]ம். செல்வத்துரை,
கோப்பாய்.

## தென்னந்தோட[illegible]ங்கள் இருந்தால்

"மக்கள்நிலத்தை[illegible] பயன்படுத்துவதில்லை. யாழ்ப்பாண[illegible]மக்களுக்குத் தென்னந்தோட்டங்க[illegible] இருந்தால் அவர்கள்விரைவிலே ல[illegible]ட்சாதிபதிகளாகிவிடுவார்கள். பிறரு[illegible] அவர்களைப் பின்பற்றவேண்டும். இந்நாட்டில் போலித்தேசியமேநின்றுநிலவுகின்றது. போலித்தேசியவாதிகளின் பொறுப்பற்றபேச்சினுல்தான் இதுஎழுந்தது."

திரு. ஹியூ. பர்ணுண்டோ,
நாத்தாண்டி, எம். பி.

## பிரதமரே காரணம்

"தற்போதைய அரசியல்நெருக்கடிக்குப் பிரதமர்பண்டாரநாயகாவே காரணம். அவர் கீழேஇறங்கிவந்து தாம்இழைத்த தீங்கிற்குப் பரிகாரம் காணவேண்டும். தமிழும் உத்தியோகமொழியாகச் சட்டம்இயற்றப்படாதவரை உணர்ச்சியுள்ள தமிழர்எவரும் சமரசத்துக்கு முன்வரமாட்டார்கள்."

செனற்றர் எஸ். ஆர். கனகநாயகம்

"நியாயமான அளவு தமிழ்உபயோகம்என்பது ஒருஏமாற்றுவித்தை. சாதாரணஉபயோகத்திற்கும், இதற்கும் என்னவேறுபாடு. இருமொழிகளும்ஒருங்கேயிருக்குமென எண்ணுகிருேம். ஆனுல், இன்று என்ன நடக்கிறது? இன்றுமொழியில் நியாயமான அளவு, நாளை உணவில், மறுநாள்உடையில். எனவே, வருங்காலசந்ததியினருக்காகப் போராடுவோம். தமிழரைச் சிங்களத்தில்ஆளும்எண்ணத்தை விடும்படிகேட்கிறேன்."

திரு. வி. ஏ. கந்தையா,
ஊர்காவற்றுறை, எம். பி.

தமிழர் சமஅந்தஸ்துப்பெருர், தமிழ் இராச்சியம் பெருர்என்கிருர் உணவு மந்திரி. இவருக்குயார் இந்தஉரிமையைக் கொடுத்தனர்? எமக்குச் சலுகை தருகிருர்களாம்! காணிதருகிருர்களாம்! இவற்றைத்தர இவர்கள்யார்? எமதுநாட்டை எமக்குத்தர இவர்கள் யார்? பயமுறுத்தலுக்குஅஞ்சோம். இரத்தஞ்சிந்த நாம்தயார். இரத்தஞ்சிந்தியும் உரிமைபெறுவோம். விடுதலைஉணர்ச்சியால் நாம்போராடப் போகிருேம்; எந்தச்சக்தியும் இதனைத் தடைசெய்யமுடியாது."

திரு. ஏ. அமிர்தலிங்கம்,

## செயலளவில் இல்லை

"மொழி, மத, வகுப்புத்தொல்லைகளை நாடுஎதிர்நோக்கியுள்ளது. பொருளாதார அபிவிருத்திகளைச் சாதிக்க முடியவில்லை. பல்வேறு அரசியல்லட்சியங்களையுடைய அங்கத்தவர்கள் அடங்கிய ஒருகட்சியால்ஆளப்படும்போது நாடுமுன்னேறமுடியாது. திரு. பண்டாரநாயகா மக்களுக்குஅளித்த வாக்குறுதிகளில்எதனையாவது நிறைவேற்றியுள்ளாரா? அவர்சொல்லளவில்தான் எதனையும் வைத்திருக்கிருரேயன்றிச் செயலளவில்நிறைவேற்றவில்லை."

திரு. டட்லி சேனநாயகா,

# தமிழ்மொழிக்குச் சமஅந்தஸ்து வழங்குக!

புத்தபிரானின் பொன்மொழிகளைக் கொண்ட துண்டுப்பிரசுரங்களை விநியோகிக்கும்பணியில் பௌத்தபிக்கு ஒருவர் திருக்கோவில் எனுமிடத்தில் ஈடுபட்டிருக்கச் சென்ற 19-ந் திகதி காணப்பட்டார். சிங்களமொழிக்குரிய அதேஅந்தஸ்தும், உரிமையும் தமிழ்மொழிக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்டுத் தமிழ்மொழியும் அரசகருமமொழியாக அங்கீகரிக்கப்படவேண்டும் என்பதற்கு ஆதாரமாகவே இவர் புத்தரின்பொன்மொழிகளை மேற்கோள் காட்டியுள்ளார்.

திரிகோணமலையிலிருந்துபோன தர்மபாலதேரோஎனும் இப்பௌத்தபிக்கு மேலும் கூறியிருப்பதாவது: "புத்தபகவானின் போதனைகளுக்கு மாருகச் சிலபிக்குகள் நடந்துகொள்வதைக்காண என்மனம் வேதனையடைகிறது. புத்தபகவான் ஒருபெரும் சாம்ராச்சியத்தை ஆளும் இன்பத்தையேதுறந்து ஞானியானுர். ஆனுல், இன்று அவரைப் பின்பற்றுவதாகக் கூறிக்கொள்ளும் சிலர் அரசியல் வேட்கை உடையவராகக் கா[illegible]ப்படுகின்றனர். நாம் அணியும் அங்கிக்கே இது ஒருஅவமானம்."

"பௌத்தமதத்தைக் காப்பாற்றும் வீரர்களென்று கூறிக்கொள்ளும் திருவாளர்கள் இராஜரத்தின, மேத்தானந்தா, ஜயசூரியாஆகியோர் இம்மாபெரும்மதத்தை இந்நாட்டிலிருந்து ஒழித்துவிடத் தயாராகின்றனர். திறமையும், புத்திக்கூர்மையும் மிக்கவரான நமதுபிரதமர் இந்தவிஷமக்காரர்களுக்கு எதிராகத் தகுந்தநடவடிக்கை எடுப்பாரென்று நான் உறுதியாக நம்புகிறேன்.

## போர்க்களமாக்குவதா ?

"நமது அழகியமணித்திருநாட்டை உயிர்ச்சேதமும், பொருட்சேதமும் ஏற்படக்கூடிய ஒருபோர்க்களமாக்கச் சிலர்முயல்வது பரிதாபத்துக் குரியதாகும். எனது இந்தத்தாராள மனப்பான்மைக்காக அநேகபிக்குகளின் விரோதத்தை நான் சம்பாதித்துள்ளேன் என்பதில் சந்தேகமில்லை. ஆனுல், இதன்மூலம் நான் அவர்களுக்குப் பௌத்ததர்மத்தை விளக்கிக் கூறுகின்றேனேயன்றி வேறில்லை. தமிழ்மொழிக்குச் சமஅந்தஸ்துக் கொடுத்தாகவேணடுமென்ற என்பிரசாரத்தை நான் இந்நாட்டின் மூலைமுடுக்குகளில் எல்லாம் எடுத்துச்சென்று பரப்பப் போகின்றேன். பிரதமர் சுயாதீனமாகச் சிந்தித்துச் செயலாற்றுமளவுக்கு விவேகமுள்ளவரென்பது எனக்குத் தெரியும். பிரதமர்செய்யும் முடிவுகள் இந்நாட்டின் இருபெரும் சமூகங்களுக்கும் மகத்தான எதிர்காலத்தை வருவிக்குமென்று நான் திடமாக நம்புகிறேன். தமிழர் என்ன கோருகின்றனரோ அது தமிழரின்உரிமைஎன்பது பிரதமருக்குத் தெரியும்."

---

குடும்பங்களைப் பாதுகாப்பதற்கென்றே மேற்குஜேர்மனிய அரசாங்கத்தில் ஒருமந்திரிஇருந்துவருகின்ருர். டக்றர்பிரான்ஸ் வௌர்மெலிங் எனப் பெயரியஇவர் ஓர்கத்தோலிக்கர். இவரதுமுயற்சியால் அநேகபிள்ளைகளைக் கொண்ட பாரியகுடும்பங்களின் இல்லிடவசதிக்காக அரசாங்கபணவுதவி அளிக்கப்படுகிறது. றெயில்மூலம் பிரயாணத்திலும் இந்தப்பாரியகுடும்பங்களுக்குச் சலுகையளிக்கப்படுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகா முக்கியத்துவம்வாய்ந்த வாக்குத்தத்தம்
### அல்லது
# முத்தித்திறவுகோல்

( V. M. Joseph )

(சென்றவாரத் தொடர்ச்சி)

மோட்சசம்பாவனையை நிச்சயப் படுத்திக்கொள்வதற்கு நாங்கள் அனுசரிக்கவேண்டிய நிபந்தனைகள் மிகவும் இலகுவானவையேயாம்.

அவையாவன : தொடர்ச்சியாக ஒன்பதுமாதங்களில்வரும் முதல்வெள்ளிக்கிழமைகளில் தக்கஆயத்தத்தோடு திவ்வியநற்கருணை பெற்றுக்கொள்வது மட்டுமே. இதில் "தொடர்ச்சியாக" என்பதைக் கவனித்துக்கொள்ள வேண்டும். எக்காரணத்தை முன்னிட்டும் இந்த "ஒன்பதுமாதத்தொடர்" முறிக்கப்படாதிருத்தல்வேண்டும். தற்செயலாகவென்றாலும் ஒருமாதத்தின் முதல்வெள்ளிக்கிழமையில் திவ்வியநன்மைவாங்கமுடியாது இந்த "ஒன்பதுமாதத்தொடர்" நிறைவேற்றப்படாதிருந்தால், திரும்பவும் முதலிலிருந்து தொடங்கி இந்தநிபந்தனையை நிறைவேற்றமுடியும். முதல்வெள்ளிக்கிழமைகளில் திவ்வியநற்கருணை வாங்கும்போது யேசுவின் திருஇருதயத்தினுடைய மகிமைக்காகவும், எண்ணுக்கடங்காத பாவிகள் இந்தத்தயாளம் நிறைந்த இருதயத்துக்குச்செய்யும் நிந்தைஅவமானங்கட்குப் பரிகாரஞ் செய்யும் கருத்துடனேயும் பெற்றுக்கொள்ளவேண்டும். நாளாந்தம் அல்லது ஒவ்வொருமாதத்தின் முதல்வெள்ளிக்கிழமையிலும் திவ்வியநற்கருணையைப் பெற்றுக்கொள்வோர் இப்பக்தியை ஓர் 'சீவிய'பக்தியாக அனுசரித்துவந்தால் மிகவும்நன்மைபயக்கும் ஓர் கிருத்தியமாய் இருக்கும். ஒவ்வொரு "ஒன்பதுமாதத்தொடர்" முடிந்ததும் அடுத்ததொடரைத் தொடக்கி அனுசரித்துக்கொண்டு வருவதிலேயே 'சீவிய' பக்திஅடங்கும்.

ஓர்எச்சரிக்கை : மோட்சத்தைச் சுவீகரித்துக்கொள்ள இந்த மார்க்கத்தைக் கையாண்டபின் பாவவழிகளில் சென்று இவ்வுலக இன்பசுகபோகங்களில் கட்டுமட்டில்லாது உழன்று தங்கள்வாழ்நாட்களைக் கழிக்கலாம்என்னும் துர்எண்ணத்துடன் ஒன்பதுமாசங்களின் முதல்வெள்ளிக்கிழமைகளிலும் எவராவது சற்பிரசாதம் பெற்றுவருவாராயின், அல்லது சற்பிரசாதம்பெற்றபின் இவ்வெண்ணங் கொள்ளுவாராயின் அவர்தேவகோபத்தைச் சம்பாதித்துக் கொள்ளுவாரேயன்றித் தனது ஆத்துமஇரட்சணியத்திற்காக எதுவும்செய்தவராய் இருக்கமாட்டார்.

ஆனால், முன்கூறியபடி நல்லஎண்ணத்துடன் தகுந்தமுறையாக ஒன்பதுமாத முதல்வெள்ளிக்கிழமைப்பக்தியை அனுசரித்துவந்த ஒருஆத்துமம் எக்காரணத்தினாலோ தனதுவாழ்க்கையில் மாற்றமடைந்து பாவச்சேற்றில் விழுந்திருந்தால், அந்தஆத்துமமானது தனது அந்தியவேளையில் கட்டாயம் மனந்திரும்பித் தேவனுடன்உறவாடி, நித்தியமோட்ச பாக்கியத்தைச் சுவீகரித்துக் கொள்ளும்என்பது நிச்சயம். இதற்குத் திருஷ்டாந்தமாகக் கீழே எடுத்துக்கூறும் சம்பவம் 1912-ம் ஆண்டு தைமாதம்4-ந்திகதி வட இத்தாலியிலுள்ள ஓர்ஊரிலே நடைபெற்றது.

தனது நேர்சீரற்ற நடத்தையினாலே 23வயதுமாத்திரம் நிரம்பப்பெற்ற ஓர் வாலிபன் காசநோயினால் பீடிக்கப்பட்டவனாய் மரணத்தறுவாயிலிருந்தான். அவனுடைய தாய்தந்தையர் எவ்வளவோ இரந்துகேட்டும் கடைசித்தேவதிரவிய அநுமானங்களைப் பெற்றுக்கொள்ள அவன்மறுத்துவிட்டான். பள்ளிப்பையனாய் இருந்தபோது மிகுந்த பக்திசிரவணத்துடன் இவ்வாலிபன் ஒன்பதுமாச முதல்வெள்ளிக்கிழமைப் பக்தியை அனுசரித்திருந்தான். ஆனால், பள்ளிக்கூடம்விட்டபின்னரோ கோவிலையும், தேவதிரவிய அநுமானங்களையும் மறந்தவனாய்ச் சீர்கெட்ட நிர்ப்பாக்கியமான வாழ்க்கையை நடத்திவந்தான். ஓர்வங்கியிலே வேலைசெய்தவன் தனது தேட்டம் யாவற்றையும அழித்தபின்பு தன்னுடைய தாய்நாட்டைவிட்டு இங்கிலாந்து சென்று அங்கே ஓர்பணியாளாய் வேலைபார்த்துவந்தான். அங்கே காசநோய்க்காளாகித் திரும்பவும் தனது சுயநாடாகிய இத்தாலிதேசம் வந்து சேர்ந்தான்.

இந்தவாலிபனின் நிர்ப்பாக்கியநிலையை அறிந்த இவனதுபள்ளித்தோழனான ஒருகுருவானவர் சிநேகிதன்என்ற முறையிலே இவனைப்பார்க்கவந்து அவன் பாவசங்கீர்த்தனம்செய்து, திவ்வியநற்கருணைபெற்றுத் தேவனுடன் கூடியசீக்கிரம் உறவாடவேண்டிய அவசியத்தைப்பற்றிப் பேசத்தொடங்கவே, அவ்வாலிபன் அவரைநோக்கி: "நீர் ஓர்சிநேகிதன் என்றமுறையிலே வருவதாயிருந்தால் வாரும்; ஆனால், குருவானவரென்றமுறையிலே இங்குவரவேண்டாம்" என்றுசொல்லி அவர் பேச்சைத் தடுத்துவிட்டான். குருவானவரோ எத்தனையோதரம் முயன்றும் பயனளிக்கவில்லை. ஈற்றில்வாலிபன் அவரைநோக்கி: "நீர் இங்குவரவேண்டாம், போய்விடும்" என்று கடிந்துகூறினன்.

சுவாமியார் மிகுந்தமனவருத்தத்துடன் எழுந்துபோகும்போது, அவ்வாலிபன்பக்கம் திரும்பி, "திருஇருதயநாதரின் வாக்குத்தத்தம் பலியாமல்போகப்போகும் முதலாம்தடவை இதுதான்" என்றார்.

அப்போதுஅவன் "நீர் என்னத்தைப்பற்றிப் பேசுகின்றீர்" என்று அவரிடம் வினவினன்.

"தனது வாழ்நாளிலே மாசத்தின் ஒன்பது முதல்வெள்ளிக்கிழமைப் பக்தியை முறையாகஅனுசரித்தபின் நன்மரணம் அடையாமல் ஒருவர்சாகப்போவது இதுதான் முதல்தடவை" என்று பதிலளித்தார்.

"நீர்கூறுவதற்கும், எனக்கும்என்ன சம்பந்தம்?" என்று வாலிபன்கேட்டதும், சுவாமியார், "சிநேகிதனே! கலாசாலைத்தோழராய் இருந்தகாலத்திலே நாம்இருவரும் இந்த ஒன்பது முதல்வெள்ளிக்கிழமைப் பக்தியைக் கிரமமாய் ஒருங்கே அனுசரித்துவந்ததை மறந்துபோனீரோ? அப்போது மிகுந்தபக்திஉருக்கத்துடன் இந்தப் பக்தியை அனுசரித்தீர்; இப்போது உமக்குப் பொறுத்தலையளிக்கக் காத்து நிற்கும் திருஇருதயநாதரின் வரப்பிரசாதத்தை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றீரே" என விடைபகர்ந்ததும், வாலிபன் வேறுமனிதனாகி விம்மல்பொருமல்களுக் கிடையே, "சிநேகிதனே! என்னைக் காப்பாற்றும்; இந்தப்பாவியைக் கைவிடாதேயும்; ஒருகுருவானவரை உடனே அழைத்துவாரும்" என்று மன்றாடினன். ஈற்றில் தேவதிரவிய அநுமானங்களைத் தக்கஆயத்தத்தோடுபெற்றுப் பாக்கியமானமரணமடைந்தான்.

இச்சம்பவத்தின்மூலம் திருஇருதயநாதர் எவ்வளவுநுணுக்கமாகத் தமது வாக்குத்தத்தத்தைக் காப்பாற்றிவருகின்றாரென நாம்அறியலாம். இப்பக்தியைஅனுசரிக்கச் சிலதடங்கல்கள் ஏற்படக்கூடும். அதாவது, கிழமைநாளிலே பாவசங்கீர்த்தனம்செய்ய அல்லது முதல்வெள்ளிக்கிழமையன்று திவ்வியபூசைகண்டு நற்கருணைநாதரைப் பெற்றுக்கொள்ளச் சிலருக்கு— முக்கியமாகத் தொழிலாளருக்குக் கஷ்டமிருக்கலாம். ஆனால், நித்தியமோட்சபாக்கியத்தைச் சுவீகரித்துக் கொள்ள இந்தமுயற்சியில் ஈடுபடத்தான் வேண்டும். இதில் வெற்றிகாணவுந்தான் வேண்டும். சிலவேளைகளில் சிலர் எவ்வளவு முன்னெச்சரிக்கையாய் இருந்தாலும் இந்தநாளை மறந்துவிடுகின்றார்கள். இது பிசாசின் தந்திரமல்லாது வேறொன்றுமல்ல. நாலைந்துபேர் ஒன்றாகச்சேர்ந்து இந்தநாளை நினைப்பூட்டும்படிசெய்தோ அல்லது வேறுவிதமாகவோ இந்தமறதிக்குணத்தை மேற்கொள்ளவேண்டும்.

கஷ்டங்கள்யாவையும் மேற்கொண்டு ஒருமுறை இந்தப்பக்தியை முடித்துவிட்டோமாகில் நித்தியசம்பாவனையை நாம் உண்மையாகவே சுதந்தரித்துக் கொண்டவர்களாய்விடுவோம். "முத்தித்திறவுகோலை" கைக்கொண்டுவிடுவோம். அதன்பிற்பாடு மோட்சகபாடத்தை எங்களுக்கு அடைத்துவிட யாராலும்முடியாது. எங்கள் சீவியகாலத்திலேயே "நாம் மோட்சசம்பாவனைக்குப் பாத்திரவான்களாகி நாகத்தை வென்றுவிட்டோம்" என்று திடாரிக்கமாகச் சொல்லக்கூடியதாயிருக்குமே. எங்கள் மரணநேரத்திலும் துட்டப்பிசாசினால் எங்களை அங்கலாய்க்க வைக்க முடியாதுபோகுமே. ஆதலால், இனியேன் தாமதம். இந்தப் பக்தியை நாங்கள்நிச்சயமாய் அனுசரிப்போம் என்று திருஇருதயநாதருக்கு இப்போதே வாக்குப்பண்ணுவோமாக.

# மடுமாதா கோயில் திருவிழா

**மடுரோட்டுப் புகையிரதத்தில் மூன்றாம்வகுப்பில் பிரயாணஞ் செய்யும் யாத்திரிகருக்கு 1957-ம் ஆண்டு ஆனிமாதம் 22-ம் தேதிதொடக்கம் ஆடிமாதம் 2-ம்தேதிவரை மலிவுச்சீட்டுகள் வழங்கப்படும், திரும்பும்பிரயாணம் ஆடிமாதம் 4-ந்தேதிஉட்படஉள்ள எந்தத்தேதியிலுந் தொடங்கிக் கொள்ளலாம்**

ஆண்டுதோறும்வரும் இத்திருயாத்திரைக்குச் செல்லும் பெருந்தொகையான யாத்திரிகரைக்கொண்டு செல்வதற்காக மடுரோட்டுக்கும் அங்கிருந்து திரும்புவதற்கும் விசேஷ புகையிரதங்கள் ஒழுங்குசெய்யப்பட்டிருக்கின்றன.

(1) மடுரோட்டிலிருந்து 50மைல் தூரத்திலுள்ள எல்லாநிலையங்களிலிருந்தும் $1\frac{1}{2}$ ஒற்றைக் கட்டணத்தில் போய்த்திரும்பும் சீட்டுகள் வழங்கப்படும். வெளிப்பிரயாணத்தில் இச்சீட்டுகள் மடுரோட்டுக்குமட்டும் பாவிக்கப்படலாம். வேறொரு நிலையத்துக்குப் பாவிக்கப்பட்டால் முழுச்சீட்டும் பறிமுதலாக்கப்படும். திரும்பும் பிரயாணத்தில் யாத்திரிகர் எந்தநிலையத்திலும்ஏறவும் தாங்கள் திரும்பும் நிலையத்துக்குள் எந்த நிலையத்திலும் இறங்கிவிடவும் முடியும்.

(2) இச்சீட்டுகள் 22-6-57-ந்தேதி தொடக்கம் 2-7-57-ந்தேதி வரையும் வழங்கப்படும். திரும்பும் பிரயாணத்தை 4-7-57-ந்தேதி உட்பட்ட தேதிவரை எந்தநாளிலுந் தொடங்கிக்கொள்ளலாம். இச்சீட்டுகள் இடையிலிறங்கித் திரும்பஏறுவதற்கோ, பாவிக்கப்படாத திரும்பும் பகுதிச்சீட்டுகளின் விலையைத் திருப்பிப்பெறுவதற்கோ செல்லுபடியாகா.

**1957-ம் ஆண்டு ஆனிமாதம் 22-ந்தேதி தொடக்கம் ஆடி 4-ந்தேதி வரை மடுரோட்டுக்கும் மடுக்கோயிற் புறக்காரியாலயத்திற்குமிடையில் றெயில்-ரோட்டு இணைப்புச்சேவை நடைமுறையிலிருக்கும். ரோட்டுக்கட்டணம் வயதுவந்தவர்களுக்கு 50சதம், 12வயதுக்குட்பட்ட சிறுவருக்கு 25சதம். ரோட்டுப் பகுதிக்குரிய சீட்டுகள் மடுரோட்டுக் கோயிற்காரியாலயத்திலும், ஏனைய பிரதான நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம். புகையிரதமார்க்கம் பயணஞ் செய்யும் வயதுவந்த ஒருபிரயாணிக்கு ரோட்டுப்பகுதியில் 70 றாத்தல் நிறையுள்ள இலவச பயணப்பொதி அனுமதிக்கப்படும்.**

**காங்கேசன் துறையிலிருந்து பிற்பகல் 5-55-க்குப் புறப்படும்புகையிரதத்தில் மடுரோட்டுக்கு நேர்வண்டிகள் தொடுக்கப்பட்டிருக்கும்.**

---

● தற்போது சுவிற்சர்லாந்திலே சிகிச்சைபெற்றுவருகின்ற பம்பாய்அதிமேற்றிராணியாரான கருதினால் கிறேசியாஸ்ஆண்டவர் குணமடைந்துவருகின்றார். இன்னும் இருவாரங்களில் அவர் இந்தியாவுக்குத் திரும்பக்கூடுமாம். மிதமிஞ்சியவேலையினால் அவருக்குஏற்பட்ட தளர்ச்சி தவிர உடலில் எத்தகையகோளாறும் இல்லையென்று டக்றர்மார் கூறியிருக்கின்றனர்.

● தென்னமெரிக்காவைச் சேர்ந்த பெருநாட்டின் முக்கியதுறைமுகங்களில்ஒன்றான கல்லாவோவிலுள்ள கத்தோலிக்ககோவில்ஒன்றில் 204அடி உயரமான கோபுரத்தின்மீது மாலுமிகளுக்குப் பயன்படத்தக்கதாய் ஓர் தீபம் அமைக்கப்பட்டுள்ளது. அதனால், இக்கோவிலுக்குத் தீபஸ்தம்பகோவிலென்று பெயர்வழங்கிவருகிறது.

● அமெரிக்க அணுக்குண்டு, சலவாயுக்குண்டுப் பரீட்சைகளில் நான்காவதுகுண்டு சென்றபுதன்கிழமை நெவடாவில் வெடித்தது. அணுக்குண்டு வெடித்த இடத்திலிருந்து றேடியோக்கதிர்இயக்கசாம்பல் அக்குண்டுப்பரீட்சையை நடத்தியவிஞ்ஞானிகள் எட்டுமைலுக்கப்பால் தங்கியிருந்தநிலையத்தைநோக்கிப்பரவவே அவர்கள் நிலையத்தைக் காலிசெய்துவிட்டு ஓடித்தப்பிவிட்டார்களாம்.

* * *

எமக்குவந்த தீங்குகளில் ஆகக் கொடியவை நாம்கேட்டவை கிடைத்ததினால்தான் வந்தது. ஆகையால், உங்கள் மன்றாட்டுகளிற் சிலவற்றைச் சருவேசுரன் கேட்காவிடில் குறைசொல்லவேண்டாம்.

—கமில்லஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

### சிற்பிகளின் பாதுகாவலர்கள்

இத்தாலிய மாபிள்கல் — அதாவது சலவைக்கல் சிற்பிகளின் பாதுகாவலர்களாக அர்ச். குளோடியஸ், அர்ச். நிகஸ்ருத்துஸ், அர்ச். காஸ்ரோறியஸ், அர்ச். சிம்போறியன், அர்ச். சிம்பிளியஸ் எனும் ஐந்துஅர்ச்சியசிட்டர்களும் பரிசுத்தபிதாவாலே அருளப்பெற்றிருக்கின்றூர்கள். இவர்களெல்லாம் சிற்பிகள். ரூேமை வேதகலாபனைகளில் வேதசாட்சிகளாக உயிர்துறந்தவர்கள். இவர்களைப்பாதுகாவலவர்களாக நியமனஞ்செய்யும் தமது அப்போஸ்தலிக்க திருமுகத்திலே, அதிகம்புராதனகாலமுதல் சிற்பிகளின்கலை சமயசேவையிலேயே இருந்துவரலாயிற்றென்பதைப் பாட்பரசர் ஞாபகத்துக்குக் கொண்டுவரலாயினர்.

### குருவானவரும் தூமகேதுவும்

வத்திக்கானிலுள்ள சோதிமண்டல அவதானநிலையத்தின் தலைவரும், ஓர்ஐரிஷ் யேசுசபைக்குரவருமான வண. டேனியல் ஓ' கொனல்சுவாமியார் அறெண்ட்-ரூேலன்ட்என்ற வால்வெள்ளியின் இரண்டாவதுவாலின் நீளத்தை அளந்துகட்டுவதில் வெற்றியடைந்திருக்கின்றூர். வத்திக்கான் அவதானநிலையத்தில் எடுக்கப்பட்ட பிரதிமைப்படங்களைக் கொண்டு இந்தவால்வெள்ளியின் இரண்டாவது வாலின்நீளம் குறைந்தபட்சம் 43லட்சத்து 50 ஆயிரம்மைலென்று கணக்குப் போட்டுப்பார்த்து நிர்ணயித்திருக்கின்றூர்.

### மேற்றிராணியாருக்கு அனுமதி

யூகோசிலேவிய மேற்றிராணியார்ஒருவர் கனடாவையும், ஐக்கியஅமெரிக்கதேசத்தையும் தரிசிப்பதற்குக் கம்யூனிஸ்த சர்வாதிகாரி ரிற்ரூேவால் அனுமதிக்கப்பெற்றிருக்கிறூர். இவர் அங்கே கிறிசெவிஸிநகரின் அப்போஸ்தலிக்க பரிபாலனரான 44வயதுடைய கபிரியேல் புகாற்கோமேற்றிராணியாரே. அந்நாட்டில் இப்படியான ஓர்தயவைப்பெற்ற முதல்மேற்றிராணியர் இவரே. இவருடையமேற்றிராசனம் 46,000கத்தோலிக்கரையும், 56 கோவில்களையும், 70குருமாரையும்அடக்கியது. தமது சுற்றுப்பிரயாணத்தின்போது அமெரிக்காவிலே பெருந்தொகையானபிள்ளைகள் நாள்தோறும் அல்லது வாரந்தோறும் திவ்வியநன்மை பெறுவதைக்கண்ணுற்று இவர் ஆச்சரியவசத்தராயினர்.

### புதியதம்பதிகளுக்குப்பேட்டி

பரிசுத்தபாப்பரசர் அன்று ஞாயிற்றுக்கிழமை ஜேர்மனியிலே கொலோன்நகரிலிருந்துபோன 120புதியகுடும்பங்களுக்கும் பேட்டியருளலாயினர். மணமக்கள்எல்லோரும் மணஉடைகள் தரித்திருந்தார்கள். மணவாளிகள் வெண்மலர்ச் செண்டுகள் கொண்டுசென்றூர்கள். பேட்டியின்போது பரிசுத்தபிதாவின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டஇவர்கள் பாரம்பரியமான அப்போஸ்தலரின் கல்லறைத் தரிசனைக்கென்று அர்ச். பேதுருவானவரின் மகாதேவாலயத்துக்கு ஊர்வலமாகச் சென்றூர்கள்.

### கருதினலான பங்குக்குரவர்

போலாந்தின் திருச்சபைமேலதிகாரியும், ஆறுவருடங்களுக்குப்பின் முதன்முதலாகச்சமீபத்திலே ரூேமாபுரியைத் தரிசித்துக் கருதினலுக்குரிய தமதுசெஞ்சீராவைப் பாப்பரசரிடமிருந்து பெற்றுக்கொண்டவருமான கருதினல் விசின்ஸ்கிஆண்டவர் தமதுசெஞ்சீராவைப் பெற்றுக்கொண்டதன்மேல், பரிசுத்தபிதாவால் தமக்குஅருளப்பெற்ற நாமமாத்திரையான தமதுபங்குக்கோவிலை உரிமையாட்சியெடுக்கச் சென்றபோது, அதன்புதிய "பங்குக்குரவ"ரான அவரைப் பெருஞ்சனக்குழாங்கள் காத்துநின்று குதூகலத்துடன்வரவேற்றன. ரிருஸ்ரிவேறேஎனுமிடத்திலுள்ள இந்தக்கோவிலானது அந்நகரிலே 1,600ஆண்டுகளின்முன் கட்டியெழுப்பப்பட்ட அர்ச். மரியநாயகியின் மகாதேவாலயமே. தேவதாயார்பேரால் ரூேமாபுரியில்கட்டப்பெற்ற முதல[illegible]வதுகோவிலென்று சொல்லப்படுகின்ற இந்த ஆலயமணிகளும், அதன்வாத்தியமும் நாதகீதஞ்செய்து அவ்வேளை ஆர்ப்பரித்தன. உரிமையாட்சி எடுக்கும்வைபவத்தைத்தொடர்ந்து கருதினல்ஆண்டவர் பேசியபோது, தமக்குஅருளப்பெற்ற கௌரவத்திற்காகப் பரிசுத்த பிதாவுக்கு நன்றிதெரிவித்து, "உலகின்தலைநகருக்கும், அதன் மகாபிரமாணிக்கமுள்ள குமாரத்தியான போலாந்துக்குமிடையே அதுமற்றுமோர் பந்தனத்தை உண்டுபண்ணியிருக்கிறது; கிறீஸ்துவேதத்தின் வெளிமதிலாக இதற்குமுன்னும், இப்போதும்போல இனிமேலும் போலாந்து இருந்துவரும்" எனக் கூறினின்றூர்.

### மடாதிபருக்கு அறிமுகமானவர்கள்

பொட்மின்நகரிலுள்ள அர்ச். மரியநாயகி ஆச்சிரமத்தின் மடாதிபரான வண. அலோய்சியஸ் சிமித்சுவாமியார் சமீபத்திலே தமது குருத்துவ 60-ம்வருட வைரயூபிலிவிழாவைக் கொண்டாடினர். தற்போது 84வயதுடையவரானஇவர் ஐந்துபாப்புமாருக்கும், இருஅர்ச்சியசிட்டர்களுக்கும் அறிமுகமானவராய் அவர்களுடன் நன்குபழகியவர். அர்ச். பத்தா[illegible] பத்திநாதரும், அர்ச். பிரா[illegible]சீஸ்சேவியர் கபிறினிதாயா[illegible]மே இவருக்கு அறிமுகமான [illegible]ருஅர்ச்சியசிட்டவர்கள். கடை[illegible]யான ஐந்து பாப்புமாருடனும் இவர்நன்கு பரிசயமுடையவர். [illegible]குழந்தையேசு அர்ச். தெரேசம்[illegible]ாள்பிறந்த 1873-ம்ஆண்டிலேயே இவர்பிறந்தார். அவள்பரமபதமடைந்த 1897-ம்ஆண்டிலே இவர்குருப்பட்டம்பெற்றூர். 84வயதுடையவராயிருந்தும் தமதுவைரயூபிலி விழாவன்று பெரியபாடற்பூசை நிறைவேற்றினுர். முன்சொன்ன ஏழுவருடனும் தாம்கொண்டிருந்ததொடர்புகளை இன்னுமே ஞாபகத்தில் இவர்கொண்டிருக்கிறூர்.

### லூர்துபதி நூற்றுண்டுவிழா

பரிசுத்ததேவதாயார் அர்ச். பெர்னதேத்அம்மாளுக்கு முதலாவதுகாட்சியருளிய நூற்றுண்டுவிழாவும், லூர்துநாயகியின் திருநாளுமாகிய அடுத்தவருடம் மாசிமாதம்11-ந்திகதியன்று லூர்துபதிநூற்றுண்டுவருடம் பாப்பரசரது பிரதிநிதிஒருவரால் அதிகாரபூர்வமாக ஆரம்பித்துவைக்கப்படும். நூற்றுண்டுவிழாக் கொண்டாட்டத்தைஒழுங்குபடுத்துமாறு ரூேமாபுரியில் நிறுவப்பட்டிருக்கும் சர்வதேசகம்மிற்றியானது தனதுபணியைச்சென்ற தூயஆவியானவர்திருநாளன்று தொடக்கியிருக்கிறது. நூற்றுண்டுவிழாத் திருவைபவங்களிலே கலந்துகொள்ளும் திருயாத்திரிகர்கள் அடைந்துகொள்ளக்கூடிய பலன்களைப்பற்றிய அட்டவணைஒன்று பிந்தவெளியிடப்படும்.

### பதினேராம்பத்திநாத பாப்பானவர்

மிலான்நகருக்குச் சமீபமாகவுள்ள தெசியோஎன்னும்கிராமம் காலஞ்சென்ற பதினேராம் பத்திநாத பாப்பானவர் அங்கு பிறந்த நூறும்ஆண்டுவிழாவை அன்றுவெள்ளிக்கிழமை ஆடம்பரமாகக்கொண்டாடியது. தற்போது ஓர்அநாதசாலைச் சிற்றுலயமாக இருந்துவருகின்ற அவர் பிறந்தஇல்லத்திலே ஓர் துக்கப் பாடற்பூசை நிறைவேறியது. அர்ச். பேதுருவானவர் மகாதேவாலயத்தின் நிலவறையிலுள்ள அவரதுகல்லறைக்குச்சமீபமான பீடங்களிலும் துக்கப்பாடற்பூசைகள் நிறைவேறின. ப[illegible]ேராம்பத்திநாதர் 192[illegible]-ம்ஆண்டு பாப்பானவராகத் தெரியப்படுமுன் கருதினல் றற்றிஎனும் நாமத்துடன் மிலான்நகர் அதிமேற்றிராணியாராய் இருந்துவந்தார். இவர் 1939-ம்ஆண்டு பரமபதம்அடைந்தபோது இவரிடமாகக் கருதினல்பச்செல்லி ஆண்டவர் பாப்பரசராகத் தெரியப்பெற்றுப் பன்னிரண்டாம் பத்திநாதர்எனும் நாமத்தைத் தாங்கினர்.

### ஆபிரிக்க சிற்றரசரின்புதல்வி

மரியாயின் வைத்தியமிஷனரிமார் கன்னிகாசபையில் சேர்ந்து கொள்வதற்காக இருபெண்மணிகள் சமீபத்திலே சுதந்திரஅயர்லாந்தின் தலைப்பட்டணமாகிய டபிளின்நகர்போய்ச் சேரலாயினர். இவர்களில் ஒரு பெண்மணி ஆபிரிக்க சிற்றரசர் ஒருவரின் புதல்வி. பிரித்தானிய கிழக்குஆபிரிக்காவைச்சேர்ந்த சுதேசிகளான ஆபிரிக்கபெண்மணிகள்இருவர் இந்தக்கன்னிகாசபையில் சேர்ந்திருப்பது இதுவேமுதன்முறையாகும். இவர்களில் சிஸ்றர்வெரோணிக் காசார்வாய் வம்புலுசாதியினரின் சிற்றரசர் எலியாஸின் புதல்வி. இவள் தங்கநைக்காநாட்டிலுள்ள எம்புலுஎனும் பகுதியைச்சேர்ந்தவள். மற்றப்பெண்மணி தங்கநைக்காவைச்சேர்ந்த ரிலாவிபகுதியைச்சேர்ந்தவள்.

### பாப்பரசருக்குப் பிரிவினைச்சபைமனு

பூர்வீக கிரேக்கபிரிவினைச்சபையின் கொன்ஸ்தாந்தி நோப்பிள்நகர பத்திறியாக்கு அவர்களின் சஞ்சிகையில் பரிசுத்த பாப்பரசருக்குச்செய்யப்பட்டுள்ள ஓர்பிரசித்த மனுவிலே, அநேக நூற்றுண்டுகளாக நிலைத்திருந்துவருகின்ற கிறீஸ்துவர்களின் பிரிவினையைத் தீர்த்துவைக்கும் நடவடிக்கை எடுக்க அவர் கேட்கப்பட்டிருக்கின்றூர். இதனை நிறைவேற்றிவைப்பாரென்பதற்குச் சமாதானபுருஷரும், தருமபுருஷருமான பாப்பரசர்மட்டிலுள்ள நம்பிக்கையே இந்தமனுவைச் செய்துகொள்வதற்குத் தூண்டிவிட்டிருக்கிறது. இந்தக்கிரேக்க பிரிவினைச்சபையே ரூேமாபுரியுடன் ஐக்கியப்பட்டிராத மிகப்பெரிய கீழைத்தேச கிறீஸ்துவசபையாகும். இதன்தலைவரே கொன்ஸ்தாந்திநோப்பிள்நகரின்பத்திறியாக்கு. பரிசுத்தபிதாவின் 81-வது பிறந்தபெருநாளின்போதே இந்தப்பத்திறியாக்குவின் "அப்போஸ்ரலஸ் அன்டிறேயாஸ்" என்றசஞ்சிகையில் முன்சொன்ன மனு வெளிவரலாயிற்று.

### நேர்த்தியை நிறைவேற்றுகின்றூர்

போலாந்தின் திருச்சபைமேலதிகாரியான கருதினல்விசின்ஸ்கி ஆண்டவர் சமீபத்திலே தமது ரூேமாபுரித்தரிசனையின்போது, சிசிலிதீவுக்குச்சென்று அங்கே சைருக்குஸ்நகரிலுள்ள "கண்ணீர் சிந்தும் கன்னிமாதா" திருச்சுருபத்தின்முன்பாக முழந்தாளிட்டுச்செபஞ்செய்யலாயினர். அவர் கம்யூனிஸ்தர்களால் சிறைவைக்கப்பட்டிருந்த காலத்தில் செய்துகொண்ட நேர்த்தியின்பேரில் தான் அவ்வாறுசெய்யலாயினர். போலாந்த திருச்சபையை இருள்சூழ்ந்திருந்தகாலத்திலே போலிஷ் கத்தோலிக்கரின்நிலைமை சற்றுவதுதிருத்தமுறுமானல் தாம் சிசிலிதீவின்திருசேத்திரத்தைத் தரிசிப்பதாகக் கருதினல்ஆண்டவர் அப்போதுநேர்த்திசெய்திருந்தார்.

### அபாயநிலைகண்டகுருவானவர்

சீனுவிலே கன்ரன்நகர சிறைச்சாலையில் இற்றைக்கு மூன்றுவருடங்களின்முன் கம்யூனிஸ்தர்களால் சிறைவைக்கப்பட்டிருந்தவரும், சீனுவிலேயேபிறந்த ஓர் மிஷனரியுமான 70வயதுடைய வண. அந்தோனி மாசுவாமியார் தமக்குண்டாயிருக்கும் கூடுதலான இரத்தஅமுக்க நோய்க்குச் சிகிச்சைசெய்விக்கும்படியாகச் சீவாபாயமானநிலைமையிலே சமீபத்தில் ஹொங்கோங்தீவுபோய்ச் சேரலாயினர். இவர் ரூேமாபுரியைத் தரிசிப்பதற்கென்று நெடுநாள்செய்திருந்த திட்டத்தை 1950-ம்ஆண்டு கைவிடவேண்டியவரானுர். ஏனெனில், அப்போது ஹொங்கோங்துறைமுக எல்லையாகவுள்ள கடற்கரைக்குத் தென்புறமாகச் செஞ்சேனை திரண்டுவிடவே சுவாமியார் ஏற்படக்கூடியஅபாயங்களைத் தமது மக்களுடன் எதிர்நோக்கவிரும்பினுர்.

மகிழ்ச்சி பொங்கும் சிரிப்புக்கு ஊற்று மகிழ்ச்சிநிறைந்த இருதயந் தான். கருணை யில்லாவிட்டால் உண்மையான மகிழ்ச்சி இருக்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆனி மாதம்

யேசுவின் திரு இருதயத்திற்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட மாதம்.

**பொதுக்கருத்து:** கிறீஸ்துநாதரின் தயாளமுள்ள அன்பைஏற்று மக்கள் மெய்யானதபசுக்கு அழைக்கப்படுவதற்காய் வேண்டிக்கொள்வது.

**வேதபோதககருத்து:** ஸ்கான்டிநேவியாவும், சுற்றுப்புற நாடுகளும் திருச்சபையின் ஒற்றுமைக்கு வந்து சேரும்படியாக மன்றாடிக்கொள்வது.

சத்தியவேத
# பாதுகாவலன்

1957-ம் ஆண்டு
ஆனி மாதம் 27-ந் திகதி

## மருதமடு மகோற்சவம்

இன்று நமதுசெல்வநாடாகிய ஸ்ரீலங்காவை என்றுமில்லாத வகையிலே பயங்கரஇருள் சூழ்ந்துகொண்டிருக்கின்றது. அதற்குக்காரணம், வழமைபோலச் சூரியன் உதயமாகாமல் விட்டதல்ல. அது என்றும்போல உதயமாகிக்கொண்டுதான் இருக்கின்றது. ஆனால், நாட்டைச் சூழ்ந்துள்ள கேட்டைவிளைப்பதான இருள்அகன்றபாடில்லை. சாந்தி—சாந்தி சாது-சாதுஎன்று முழக்கஞ் செய்துகொண்டிருக்கும் நாட்டில் சாதுவையோ, சாந்தியையோ கண்டுகொள்வது இன்றுஅரிதாகிவிட்டது. இனத்துவேஷம், மனத்துவேஷம், மொழித்துவேஷம், மதத்துவேஷம் முதலாம் பல்வேறு துவேஷங்களும் குமுறியெழுந்து அலைமோதிக்கொண்டிருக்கும்போது சாந்திபிறப்பதும், சாதுபிறப்பதும் எங்ஙனம்? நாமும் வாழ்ந்து, நம்மைப்போல் பிறரும்வாழ்வதற்கு இடமளிக்கவேண்டும் என்பன போன்ற சுலோகங்கள் மலைபோலெழுந்தும் நன்மனதையோ, நன்மதியையோ, நல்லெண்ணத்தையோ பிறப்பியாது மதிப்பற்றனவாய்க் காற்றோடுகாற்றாய்க் கலந்துபோகின்றன. ஆயினும் இன்றுள்ளநிலைமையில் எல்லாச் சமூகங்களிடையேயும் ஒற்றுமையானசமரசத்தைக் கொண்டுவர என்னசெய்யப்படவேண்டுமென்ற உணர்ச்சிஎழுந்துதானிருக்கிறது. தமிழ்ப்பேசும்மக்களுக்கு அரசாங்கத்தின்மட்டிலுள்ள அவநம்பிக்கையையும், மனக்கசப்பையும் போக்குவதற்குச் சரியானவழி யாதென்ற ஆராய்ச்சி பிறந்திருக்கிறது. இலங்கையிலுள்ள பல்வேறு சமூகங்களிடையேயும் சாந்தியையும், சௌசன்யத்தையும், ஐக்கியத்தையும் விருத்திசெய்யும் பொருட்டு என்னசெய்யவேண்டுமென்று ஆலோசனைகூறப்படுகிறது. "அரசாங்கம் மொழிக்கொள்கையில் மிகவும்அவசரப்புத்தியுடன் நடந்துகொண்டது; இந்தஅரசாங்கம் தான்செய்த தவறைத்திருத்திக்கொண்டு நாட்டை ஆபத்திலிருந்து காப்பாற்றவேண்டும்.; நான் சிங்களவனென்றமுறையில் என்தாய்மொழியில் பற்றிருந்தபோதிலும் நாட்டின்மீதுள்ளபற்று அதிகமாகும்; எல்லாரும் சாதி, சமய, இனபாகுபாடின்றி ஐக்கியமாக வாழவேண்டும்" என்றுசிங்களப் பிரமுகர் ஒருவரே கூறுகின்றார். "இன்றையஅரசாங்கம் நாட்டின் அமைதியையும், ஒற்றுமையையும் குலைத்துவிட்டது; இன்று ஐக்கியஇலங்கை பிளவுபட்டுள்ளது; எங்குபார்த்தாலும் சமயசச்சரவுகளும், வகுப்புத்துவேஷங்களுமே தலைகாட்டியுள்ளன; இந்தநாட்டையே தாயகமாகக்கொண்டுள்ள தமிழர்களை ஒருசிலவகுப்புவாத வெறியர்கள் கேவலமாகநடத்த முயல்வது வருந்தத்தக்கது; தமிழர்களும் மனிதர்கள்; அவர்களைக் கௌரவிக்கவேண்டும்; அத்துடன் அவர்களின்மொழியையும் பாதுகாக்கவேண்டும்; தமிழர்களை நசுக்கிஆளலாமென்று ஆட்சியாளர்கள்நினைத்தால் அது பகற்கனவாகவேமுடியும்; இந்தஅரசாங்கம் ஆட்சிக்குவந்தபின் மக்களிடையே துவேஷத்தைத்தான் வளர்த்ததேதவிர ஒழுங்கானகாரியம் ஒன்றையுமே இதுவரைசெய்ய அதனால்முடியவில்லை; இன்று இந்தநாட்டில் இத்தகைய சீர்கேடானநிலை ஏற்படக்காரணம் புத்தகம்மிஷனே; ஆகவே, அதனைமுதலில் தடைசெய்தால் நாடு முன்னேறும்" என்று மற்றோர் சிங்களப்பிரமுகர்கூறுகின்றார். "இலங்கையிலுள்ளநாம் உலகசமாதானத்துக்காகப் பாடுபட்டுழைக்கும் இதேதருணத்தில் நமதுஉள்நாட்டின்அமைதிக்கு ஆபத்துஏற்பட்டுள்ளது; இது வெட்கப்படவேண்டியஒருவிஷயமாகும்; இந்நாடு புத்தர், இந்துக்கள், கிறீஸ்துவர்கள், முஸ்லீம்களாகிய அனைவரும் ஒன்றுசேர்ந்து அமைதியுடனும், நல்லெண்ணத்துடனும் வாழக்கூடிய—வாழ்ந்துள்ள ஒருநாடாகும்; இப்போது இனவகுப்புப்பிளவுகள் ஏன் கிளம்பவேண்டுமென்பது எனக்குத் தெரியவில்லை" என்று ஐக்கியநாடுகளின் ஸ்தாபனத்திலே இலங்கையின் நிரந்தரப்பிரதிநிதியும், ஐக்கியஅமெரிக்கதேசத்திலே இலங்கையின்ஸ்தானிகருமான திரு. ஆர். எஸ். எஸ். குணவர்த்தன கேட்கின்றார். கலகம் பிறந்தால் நியாயம்பிறப்பது மாத்திரமன்றி ஞானமும்பிறக்கும். பலவிதஆபத்துகள் இலங்கையைச்சூழ்ந்துள்ள இந்தநிலைமையிலே ஸ்ரீலங்காவின் தலைசிறந்த கத்தோலிக்கதிருசேத்திரங்களில் ஒன்றாகிய மருதமடுச் செபமாலைஇராக்கினியின் ஆடிப் பெரியமகோற்சவம் வருகின்றது. அத்திருத்தாயாரின் பக்தர் குழாங்கள் அத்திருப்பதியை—அதன்நடுநாயகமாக விளங்கும் பரிசுத்தசெபமாலை இராக்கினியின் கிருபைச்சிம்மாசனத்தை ஏறெடுத்தும், அத்திருப்பதிக்கு யாத்திரைசெய்தும் கொண்டிருக்கிற இச்சந்தர்ப்பத்திலே அத்திருத்தாயாரின் சலுகையால் இலங்கையிலே நீதியும், சமாதானமும், அமைதியும் நிலவும்படியாக மாதாவின் பக்தர்களெல்லாம் அவரை இரந்துமன்றாடுவார்களென்பதில் சந்தேகமில்லை.



சதாசகாயமாதா கோணம்

## தொண்டைக்கட்டி மறைந்தமாயம்

மருதானை மாளிகாக்கந்தையில் வசிக்கும் ஏ. இரத்தினராஜா என்பவர் ஓர் பிறவிச்சைவர். இவருக்குத் தொண்டையில் ஒருகட்டிதோன்றி, நாளடைவில்வளர்ந்து பருமனாகி மிகவும்கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தார். இக்கட்டியை மாற்றுவதற்கு அநேககைதேர்ந்த வைத்திய நிபுணர்கள் சத்திரசிகிச்சை செய்யும்படி அவருக்கு ஆலோசனை கூறினர். சத்திர சிகிச்சையின்றி வேறெவ்வித வெளிமருந்தினாலும் இக்கட்டி குணமுறாதென்றும் செப்பினர்.

ஆனால், சத்திரசிகிச்சை செய்வது-அதிலும் தொண்டையிலேற்பட்டிருக்கும் கட்டிக்கு இச்சிகிச்சையைக் கையாளுவது அபாயமென்றே இரத்தினராஜா எண்ணினார். ஆதலால் எதுவிதமும் வெளிப்பூச்சு மருந்தினாலேயே இக்கட்டியை மாற்றவேண்டுமென்று முடிவுகட்டிச் சத்திர சிகிச்சைக்கு உடன்படாது வேறு பலவழிகளை நாடினார்.

கடைசியாக இரத்தினராஜா தனது வியாதி மாறுவதற்கு தேவஉதவியன்றி வேறுமார்க்கமில்லையெனக் கண்டு சதாசகாயநாயகியின் சந்நிதியைச் சரணடைந்தார் அங்குசென்று தனக்குற்ற வியாதியையும், சஞ்சலத்தையும் மனநம்பிக்கையுடன் முறையிட்டு விண்ணப்பித்தார். விண்ணப்பம் செதய் நாளிலிருந்து எவ்வித அவசரமான வேலையில்லட்டிகளும், சுகவீனங்களும், வேறுவிதமான அசம்பாவிதங்களும் குறுக்கிட்டபோதிலும் ஒருநாளெங்கிலும்தவறாமல் ஒவ்வொருபுதன்கிழமையும் நவநாளின் ஆராதனைகளில் பங்குபற்றிவந்தார்.

இவரது பக்திவிசுவாசம் நிறைந்த விண்ணப்பத்தினாலும், வேண்டுதலினாலும் நவநாளின் ஆரம்பநாளிலிருந்தே தொண்டையிலேற்பட்ட கட்டி நாளடைவில் குறையஆரம்பித்தது. ஈற்றில் நாலாவது புதன்கிழமை முற்றிலும் மாறி இருந்தவிடம் தெரியாமல் மறைந்துவிட்டது.

இவ்வற்புதத்தைக் கண்ட இரத்தினராஜா ஆச்சரியமும், ஆனந்தமும் அடைந்து தனது நன்றியறிதலை மிகுந்த பக்திச்சிரத்தையுடன் சகாயநாயகிக்குத் தெரிவித்தார். அன்றியும், அத்தாயாரை அனுதினமும் தோத்திரம்புரியச் செபமாலையின் மந்திரத்தையும் தன் கத்தோலிக்க நண்பனொருவனிடம் கற்றறிந்து இன்றுவரைக்கும் அதனைச் செபித்துக் கொண்டு வருகிறார். அவர் எங்கு சென்றாலும் அச்செபமாலையைத் தனது சட்டைச் சாக்குக்குள்ளேயே கொண்டு செல்லுகின்றார். (1953-ஆனி)

## அதிபர் சுபதினவிழா

நமது அச்சகஅதிபர் வண. பி. ஏ. ஜோண் சுவாமியவர்களின் பெயர் கொண்ட சுபதினம் சென்ற 24-ந் திகதி திங்கட்கிழமை வந்துபோயிற்று. அன்றுகாலை அர்ச். சூசையப்பர் கூட்டச்சிற்றாலயத்திலே சுவாமியவர்கள் நிறைவேற்றிய திவ்விய பூசையிலே அச்சகத்தைச் சேர்ந்தவர்கள்அனைவரும் சமூகமாயிருந்து, பின்னர் கூட்டச்சாலையிலே அவருக்கு ஓர் பரிமளிப்பான உபசரணை நடத்தினார்கள். போர்மன் ஜே. நிக்கலஸ்அவர்கள் மலர் மாலையிட்டு அவரை வரவேற்றார். பாதுகாவலன் பத்திரிகாசிரியர் அவர்கள் திருநாட்சோபன வாழ்த்துரைகூறினார். அன்பளிப்புகள் வழங்கப்பட்டன. அதன்மேல் சிறந்த சிற்றுண்டி உபசரணையுடனும், அதிபர் சுவாமிகளின் நன்மதியுடனும் விழா இனிதே நிறைவாயிற்று.

## கோட்டைப்பிட்டித் தபால்

கோட்டைப்பிட்டிக்கிராமம் சலாபத்திலிருந்து வடக்கே ஐந்துமைல் தூரத்திலுள்ளது. குவைறஸ்என்பவரால் எழுதப்பட்ட ஒருஅறிக்கையிலே இக்கிராமம் அக்காலத்தில் குட்டைப்பிட்டிஎன அழைக்கப்பட்டதாக அறியக்கிடக்கிறது. இக்கிராமத்தில் 18-ம் நூற்றாண்டிலேயே கத்தோலிக்ககோவிலொன்று கட்டப்பட்டதாக ஆராய்ச்சியாளரின் அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இந்தக்கோவிலில் பிரதிட்டை செய்து வைக்கப்பட்டிருக்கும் அர்ச். அந்தோனியாரின் திருச்சுரூபம் ஒரு மரப்பொந்திலிருந்து கண்டெடுக்கப்பட்டதென்பது பாரம்பரியம். இத்தலத்தில்நிகழ்ந்த அநேக அற்புதங்களால் காலிப்பகுதியிலிருந்துகூட யாத்திரிகர்கள்வந்ததாக 1828-ம்ஆண்டில் சில்கேர்க்என்பவர் எழுதிவைத்திருக்கிறார். யாத்திரிகர்களின்தொகை கூடக்கூடக் கோவிலும் விசாலமாக்கப்பட்டது. கொழும்பு அதிமேற்றிராணியாராயிருந்து காலஞ்சென்ற மசொன் ஆண்டவர் சலாபப்பகுதிப் பங்குக்குருவராகக் கடமையாற்றியகாலத்திலே இப்போதுள்ள பெரியகோவில் கட்டியெழுப்பப்பட்டது. ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக்கானயாத்திரிகர்களைக் கவர்ந்துகொண்டிருக்கும் கோட்டைப்பிட்டி அர்ச். அந்தோனியார்திருநாள் வழமைபோல இவ்வாண்டும் நவதின ஆராதனைகளுடன் ஆரம்பமானது. 15-6-57 சனிக்கிழமை மாலை 8மணிக்குச் சலாபமேற்றிராணியாரான மகாவந். எட்மண்ட் பீரிஸ்ஆண்டவர் பலகுருமார் உதவிசெய்ய மாலைஆராதனை பாடினார். மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 7-30 மணிக்குச் சலாபம், அர்ச். மரியநாயகிஆலய பரிபாலனசுவாமிகளால் பாடற்பூசை நிறைவேறியது. ஆராதனைவேளை தமிழிலும், சிங்களத்திலுமாக உள்ளத்தையுருக்கும் உயரிய பிரசங்கங்கள் நடைபெற்றன. திவ்விய நற்கருணை எழுந்தேற்றத்தின்பின் திருச்சுரூபஊர்வலமும், அதைத்தொடர்ந்து திருச்சுரூபஆசீர்வாதமும் அருளப்பெற்றுத் திருநாள்இனிதே முற்றுப்பெற்றது. — நிருபர்

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

நான் சங். சிஸ்றர் அல்போன்ஸாவிடம் 1949-ம் ஆண்டு புரட்டாசி மாசம் நோவினை செய்து கேட்டகாரியம் கிடைக்கப்பெற்றேன். இவ்வளவு வருடங்களாக நான் எனது நேர்த்தியின்படி அதைப் பிரசுரிக்கவில்லை. இதனால் என் குடும்பத்தில் பல கவலைகள் கஷ்டங்கள் எப்பொழுதும் நடந்துகொண்டே வருகிறது. இதனால் நான் அவவிடம் மன்னிப்புக் கேட்டு அவவுடையபுதுமையைப் புகழ்ந்து இதை எனது நேர்த்தியின்படி பிரசுரிக்கிறேன். இதன் பின்னால் என் கவலை கஷ்டங்கள் எல்லாவற்றையும் அவ நீக்குவா என்பது என் நம்பிக்கை.

கொழும்பு, N. G.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைமை ஆசிரியர்களுக்கு அறிவித்தல்

1957-ம் ஆண்டு ஆடிமாதம் 9-ந் திகதி செவ்வாய்க்கிழமை பகிரங்க விடுதலைநாளாதலால் அன்று தினம்பாடசாலைமூடப்படவேண்டும்.

முன்பு அறிவித்துள்ளபடி 8-7-57 பகிரங்கவிடுமுன்றநாள் அல்ல. அன்று தினம் பாடசாலை நடைபெறவேண்டும்.

PHILIP PONNIAH
Gen. Manager of R. C. Schools
Jaffna, 26-6-57.

திரு. எஸ். எம். லூயிஸ்அவர்கள் ஆரம்பவுரைநிகழ்த்தி அனைவரையும் வரவேற்பதை இப்படம் காண்பிக்கிறது.



# சுதேச வர்த்தமானம்

### திவ்வியநற்கருணைத் திருநாள்

நம்முடைய ஆசனக்கோவிலிலே சென்ற 23-ந்திகதிஞாயிறுவாரம் திவ்வியநற்கருணைத்திருநாள் வழமைபோல ஞானப்பரிமளிப்பாய்க் கொண்டாடப்படலாயிற்று. காலை 7மணிக்கு வண. எஸ். கோமெஸ் சுவாமியவர்களால் பாடற்பூசைநிறைவேறியது. சாயந்தரம் நகரின்நாலுபகுதிகளிலுமிருந்து நானாகலாசாலைகளைச்சேர்ந்த மாணவர், மாணவிகளும், பக்திச்சபைகளைச் சேர்ந்தவர்களும், நானாகோவில்களைச்சேர்ந்த பெருந்திரளான மக்களும் ஆலயங்கொள்ளாது நெருங்கியிருக்க, நம்மேற்றிராணியாண்டவர் அவர்கள் அநேககுருமார், குருத்துவமாணவர் சமேதராய் வேஸ்பர்பாடினார். அதன்மேல்அவர் கதிர்ப்பாத்திரத்தைத் தமதுகரங்களில்ஏந்தித் திவ்வியசற்பிரசாதநாதனை வீதியெழுந்தருளச் செய்தார். பக்தர்குழாங்கள் செபங்கள் ஓதியும், திவ்வியகானங்கள் பாடியும் தீபதூபங்காண்பித்தும், புஷ்பாஞ்சலி செய்தும்நிற்க, அழகுறச்சிங்காரிக்கப்பெற்றிருந்த வீதிகளினூடாக நற்கருணைநாதர் திருப்பவனிகொண்டார். சந்தியோகுமையோர்கோவில்முகப்பிலும், சென்மாட்டீன் குருமடத்துப் பெரியவாயிலிலும் அமைக்கப்பெற்றிருந்த அலங்காரபீடங்களிலே திவ்விய நற்கருணை எழுந்தருளச்செய்து ஆசீர்வாதம்அருளப்பட்டது. ஈற்றிலே ஆசனக்கோவிலில் அருளப்பெற்ற ஆசீர்வாதத்தோடு திருநாள் பக்தியருட்சியுடன் நிறைவாயிற்று.

### வண. எவ். ஓ. தம்பிமுத்துசுவாமிகள்

திரிகோணமலை மேற்றிராசன கத்தோலிக்கபாடசாலைகளின் பிரதமமுகாமைக்காரரான வண. பிரான்சீஸ் ஓ. தம்பிமுத்துசுவாமியவர்கள் சுகத்தாழ்வுகாரணமாகக் காலவரையில்லாத ஓய்வுஅருளப்பெற்றிருக்கின்றார். அவர் தமதுகடமைகளைப் பார்க்கவியலாத நிலைமையிலேஇருப்பதால் அவரிடமாக யேசுசபையைச்சேர்ந்த வண. இம்மனுவேல் கிறவுதர்சுவாமியவர்கள் ஐக்றிங்பிரதமமுகாமைக்காரராக முழுப்பொறுப்புடனும், முழுக்கருமபாரத்துடனும் நியமனஞ்செய்யப்பெற்றிருக்கிறாரென அறிகின்றோம்.

### உதவிபெறும் சிறந்தபாடசாலைகள்

சிறந்தமுறையிலே நடத்தப்பட்டுவருகின்ற உதவிப்பணம்பெறும் பாடசாலைகளுக்குச் சகலஆதாவுகளையும் அளிக்கவேண்டுமென்று வித்தியாதிகாரிகளைக் கல்விமந்திரி தஹநாயகா கேட்டிருக்கின்றார். சென் யோசெவ் கல்லூரி, சென் தோமஸ்கல்லூரி, ஆனந்தாக்கல்லூரி, திரினிற்றிக்கல்லூரிஆகியன இந்நாட்டுக்குப் பெருமையளிக்கின்றன; அரசாங்கபாடசாலைகளில் றோயல்கல்லூரிமட்டுமே இத்தரத்திலுள்ளதென்று கல்விமந்திரி தெரிவித்திருக்கின்றார்.

### செபமாலைத்தாசர்சபைப் புதியமடம்

தேவத்தைத் தி[illegible]சத்திரத்திலுள்ள தேசியமகாதேவாலயத்தையடுத்துக் கட்டப்பெற்ற தோலகட்டிச் செபமாலைத்தாசர்சபைப் புதியகன்னிகாமடம்—அதாவது பரிகாரமாதா கன்னிகாமடம் சென்றவைகாசிமாதம் 31-ந்திகதி வெள்ளிக்கிழமை கொழும்பு அதிமேற்றிராணியாரான மகாமேன்மைதங்கிய தோமஸ் கூறேஆண்டவரால் ஆசீர்வதித்துத் திறந்துவைக்கப்படலாயிற்று. பல்வேறு கன்னிகாசபைகளைச்சேர்ந்த ஒருபெருந்தொகையான கன்னியாஸ்திரீமார் இத்திருவைபவத்திற்குச் சமுகமளித்திருந்தார்கள். அவ்வேளை அதிமேற்றிராணியாண்டவர் பேசியபோது, சீவியத்திலே தியானசம்பிரதாய வாழ்க்கையினதும், விசேஷமாக இந்நாட்டிலே திருச்சபையின் அப்போஸ்தலத்துவத்தினதும் முக்கியத்துவத்தைப்பற்றிக் குறிப்பிட்டு, இயன்றமட்டும் விரைவிலே புதியமடத்தின் கட்டடங்களை அமைக்க 20,000 ரூபாவென்றும், 6,000 ரூபாவென்றும் அதிகம் மனத்தாராளமாகப் பணம்உபகரித்த பரோபகாரிகளுக்கெல்லாம் நன்றி தெரிவித்துநின்றார். இந்தச் செபமாலைத்தாசர்சபைப் புதியமடத்தை ஆரம்பித்து நடத்துதற்கென்று தோலகட்டியிலிருந்துபோயிருக்கும்பன்னிரு கன்னியாஸ்திரிமாருள்ளும் ஆறுபேர் கொழும்புப்பகுதியைச் சேர்ந்தவர்கள். இந்தப் புதியமடம் சிங்களம்பேசும் கன்னியர்கள் மடமாயிருக்குமென நம்பப்படுவதால் அங்கு சென்றுள்ள சிங்களசாதியினர்அல்லாத கன்னியாஸ்திரிமாரும் ஏற்கனவே சிங்களத்தில் செபங்களைச்சொல்லக் கற்றுவிட்டார்கள்.

### வட்டமேசைமகாநாட்டு ஆலோசனை

"நான் சமீபத்தில் யாழ்ப்பாணத்துக்கும், மட்டக்களப்புக்கும் விஜயஞ்செய்து பல்வேறு அரசியல்அபிப்பிராயங்களையுங்கொண்ட பல பிரமுகர்களைச் சந்தித்து இருசமூகங்களுக்கிடையிலும் தற்போதிருக்கும் வேறுபாடுகளையும், அந்தவேறுபாடுகளை ஒழிப்பதற்கான வழிவகைகளையும்பற்றி விவாதித்தேன். மொழிப்பிரச்சினைசம்பந்தமாக அவர்களிடம் அளவு கடந்த உணர்ச்சியும், ஏமாற்றமும்இருப்பது என்மனதில்பட்டது. இந்தப்பிளவைப் பேச்சுவார்த்தைகளின்மூலம் தீர்த்து, இருசமூகங்களுக்கிடையிலும் சமாதானத்தையும், சௌசன்யத்தையும் நிலைநாட்டவேண்டுமென்ற அந்தரங்கபூர்வமான ஆர்வம் சேர் வைத்தியலிங்கம் துரைசாமிஅவர்கள் உட்படப் பல முதிர்ந்ததலைவர்களிடம் இருப்பதையும் நான்கண்டேன். இருதாப்பிலும் சந்தேகமும், தப்பபிப்பிராயமும் இருந்து வருவதால் ஒருவட்டமேசைமகாநாடு கூட்டுவதற்கு இது பொருத்தமான ஓர்சந்தர்ப்பமென்று நான்நினைக்கிறேன். இந்தத்தப்பபிப்பிராயம் அகற்றப்பட்டால் இருசமூகங்களுக்கிடையிலுள்ள பிளவை அகற்றிச் சமாதானத்தையும், சௌசன்யத்தையும் நிலைநாட்டலாமென்பதே எனதுகருத்து" இவ்வாறு திரு. ஜி. சி. மெண்டிஸ் விடுத்திருக்கும் ஓர்அறிக்கையில் தெரிவித்திருக்கின்றார்.

### கூப்பனுக்குக் குடிதண்ணீர்

சென்ற மாரிகாலத்தின்பின் நல்ல மழைபெய்யாததால் ஊர்காவற்றுறைப் பகுதியில் தண்ணீர்ப்பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. ஊர்காவற்றுறைப் பட்டினசபையின் எல்லைக்குட்பட்ட பகுதியிலே நாளொன்றுக்குப் 15,000கலன் குடிதண்ணீர் வழங்கப்பட்டுவந்தது. இப்போது நாளொன்றுக்குப் 12,000 கலனே வழங்கப்படுகிறது. கூப்பனுக்குத் தண்ணீர்வழங்கும்முறை சென்ற 19-ந் திகதிமுதல் நடைமுறைக்கு வந்திருக்கிறது.

### நிறுத்திவைக்க வேண்டுகோள்

இலங்கைத் தேசியசபை (லீக்) யின் கூட்டம்ஒன்று சென்றதிங்கட்கிழமை கொழும்பில் நடந்தேறியது. அதிலே சிங்களம்மட்டும் சட்டத்தை நடைமுறையில் கொண்டு நடத்துவதை நிறுத்திவைக்கும்படி அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம்ஒன்று ஏகமனதாக நிறைவேறியுள்ளது. அக்கூட்டத்திலே சபையின் காரியதரிசியான டக்றர் ஜே. பி. பெரேரா அதனைக்கொண்டுவந்துபேசியபோது: சிங்களம்மட்டும்சட்டம் நிறைவேற்றப்பட்டமை எங்கள்தாய்நாட்டுக்குச் செய்த ஓர் அநீதியாகும்; மொழிப்பிரச்சினைக்கு நாங்கள்கூறும்ஆலோசனைகள் ஏற்கனவே ஏற்பட்டுள்ள நஷ்டத்தை நிவிர்த்திசெய்வதுடன், நாட்டின் நலனைக்கருதி எங்கள் ஆலோசனையைக் கேட்பது நேர்மையான எந்த ஒருஅரசாங்கத்தினதும் கடமையாகும்; சிங்களம்மட்டும்சட்டம் நாட்டிலே பெருமளவில் குழப்பங்களை உண்டுபண்ணிவிட்டதெனக் கூறலாயினர்.

## அடைக்கலமாதா கோவில்
# தூய ஆவியானவர் பூசை
### (Red Mass)

இத்திவ்வியபூசை வழமைப்பிரகாரம் சென்ற 9-6-57 ஞாயிற்றுக்கிழமை முன்னிலும் அதிபக்தியருட்சியாக நிறைவேறலாயிற்று. அத்தருணம் கடற்படை, தரைப்படைஅதிகாரிகள், நீதிபதிகள், வழக்கறிஞர்கள், மற்றும்பிரமுகர்கள்உட்படப் பங்குக் கிறீஸ்துவர்கள் பெருந்திரளாகச் சமுகமளித்திருந்தமை ஈண்டு குறிப்பிடத்தக்கது.

அன்று பொழுதுபுலர்ந்ததும் ஆலயமணிகள் ஆர்ப்பரித்தன. பக்தர் குழாங்கள் பக்திப்பரவசத்துடன் ஆலயத்தைநோக்கிச் சரிந்தன. ஆலயமும், பலிபீடமும் பலவர்ணமாலைகள், பசுந்தளிர்களால் அலங்கரிக்கப்பெற்று, மின்சாரங்கள் ஏற்றப்பட்டுத் தேசோமயமாய் விளங்கின.

சம்பத்திரிசியார் கல்லூரி அதிபர் அதிவண. எஸ். என். அருள்நேசன் சுவாமியவர்கள் திவ்வியபலிபூசை நிறைவேற்றிக் கூறியநன்மதிகள் எல்லோரது இருதயங்களையும் அகழ்ந்து அருள்வீசச்செய்தன. பூசையிலே பெருந்திரளானமக்கள் தேவ்விக விருந்தருந்தித் தூயஆவியானவருக்குத் தோத்திரநமஸ்காரஞ் செய்தார்கள்.

அதன்மேல் அடைக்கலநாயகியின் ஆலயமக்கள் ஆசித்திருந்த "வாசிககுழு" கட்டளைக்குரவர் வண. எஸ். ஏ. சுவாம்பிள்ளை சுவாமியவர்களால் சென்ற 1956-ம்ஆண்டு இதேதினத்தில் அடியிடப்பட்டமையால் இந்த வாசிககுழு சுவாமியவர்களின் அயராமுயற்சியால் அன்றுதினம் இரண்டாவது நிறைவுவிழாவைக்கண்டு அனைவரையும் மகிழச்செய்தது

பூசைமுடிந்ததும் இக்குழுவின்கூட்டம் திரு. எஸ். எம். லூயிஸ் அவர்கள் தலைமையிலே அநேக குருப்பிரசாதிகள், பெண்மணிகள்சமுகமாகப் பாடசாலையில் ஆரம்பமானது. அத்தருணம் தலைவரது முன்னுரையின்பின் வண. பி. ஏ. ஜோண் சுவாமியவர்கள் எழுந்து, இந்தவாசிககுழு இக்கால வாலிபர்கள் கம்யூனிஸ்தர்கையிலே சிக்குண்டுஅலையாது ஓர்ஊன்றுகோல்போல்உதவும் உத்தமசாதனமென்றும், வாலிபர்கள் கண்டகண்டபுத்தகங்களையும்வாசியாது தடுத்துவைக்க வேண்டியகடமை பெற்றாருடையதேயென்றும் கூறிநின்றார். பங்குக்குரவர்எழுந்து, பங்குக்கிறீஸ்துவர்கள் கத்தோலிக்க வேதத்தை எதிர்க்கும் சக்திகளை முறியடிக்கக் கிறீஸ்துவபட்டாளங்கள் ஆயத்தமாயிருக்கவேண்டுமென வற்புறுத்தினர். ஈற்றில் சிற்றுண்டிஉபசாரணை நடைபெற்றுச் செல்வி பி. பிரகாசம், டக்றர் யோசெவ்என்பவர்களால் நன்றிதெரிவிக்கப்பட்டுக் கூட்டம்முடிவடைந்தது.

A. S.

**St. Andrews Missal**

**in Various Sizes. Eng. & Latin.**

1. Daily Missal with Vespers for Sundays & Feasts Gilt Edges
2. Daily Missal Gilt Edges
3. ,, ,, Red ,,
4. ,, ,, Junior Edition.

*Please Apply to:*

The Manager,
St. Joseph's Catholic Press,
Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தூவணைத் தபால்

தூவணை ஆலயத்திலே அர்ச். தமதிரித்துவத்தின் திருநாள் இம்மதி 16-ந் திகதி விமரிசையாக நடந்தேறியது. தினமும் மாலைஆராதனை நடைபெற்றது. சனிவாரமன்று மாலை 7–30 மணிக்குப் பங்குக்குருவரும், வண. ஜே. எம். சவரிமுத்து சுவாமிஅவர்களும் உதவிபுரிய, கடற்கரைத்தெரு உதவிக்குரவரால் மாலைஆராதனை பாடப்பெற்றது. அவ்வமயம் வண. சவரிமுத்து சுவாமியவர்கள் பரமதிரித்துவத்தின் மகத்துவம்பற்றி ஓர்அரிய பிரசங்கம் நிகழ்த்தினர். பாடகர்குழாமின் இனிய கீதங்கள் ஒலிபரப்பிமூலம் பரந்து கொண்டிருந்தன.

மறுநாள் அதிகாலைமுதல் திவ்விய பூசைகள் நிறைவேறின. காலை 7 மணிக்குப் பங்குக்குரவரால் திருநாட் பூசை நிறைவேறியது. அதன்மேல் திவ்வியசற்பிரசாதநாதர் பீடத்தின் மத்தியில் எழுந்தேற்றஞ்செய்து வைக்கப்பெற்றதும் திருமணித்தியாலம் நடைபெற்றது. பிற்பகல் 4 மணிக்கு எழுகுருமார் உதவிபுரிய, வண. ஏ. பி. தோமஸ்சுவாமியவர்கள் மாலையாராதனைபாடினர். அவ்வமயம் வண. சவரிமுத்துசுவாமியவர்கள் சற்பிரசாதநாதரைப்பற்றிச் சிறந்தஓர்பிரசங்கஞ்செய்தார். அதன்மேல் சற்பிரசாதநாதரின் திருப்பவனி ஆரம்பமாயிற்று. கோவிலைச்சுற்றிவர நவமாய் அமைக்கப்பட்டிருந்த மண்டபங்கள் செகசோதியாகக் காட்சியளித்தன. பாடகர்குழாம் கீதம்பாட, பள்ளிச்சிறுரும், ஆசிரியர் ஆசிரியைகளும் ஏனையவர்களும் முன்செல்ல, பள்ளிப்பாலர் புஷ்பாஞ்சலி செய்யச் சற்பிரசாதநாதர் திருப்பவனி சென்றார். அவ்வேளை பவனிசென்ற பாதை அழகுற அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஈற்றில் சற்பிரசாத ஆசீர்வாதம் அருளப்பட்டுத் திருநாள் இனிதே முடிவெய்திற்று. — நிருபர்

## வன்னித் தபால்

**தேவநற்கருணைத் திருநாள்:** வளமிக்க வன்னிநகராகச் சிறப்புற்று விளங்கும் செட்டிகுள விசாரணைப் பங்கில், தேவநற்கருணைத் திருநாள் சென்ற 16–6–57 ஞாயிறுவாரம் வழமைபோலப் பத்திச் சிறப்பாய்க் கொண்டாடப்படலாயிற்று.

அன்று அர்ச். அந்தோனியார் ஆலயம் அழகிய இயற்கைமலர்களாலும், பசுந்தளிர்கள், பலவர்ண மாலைகளாலும் கண்ணைக்கவர்ந்து கவினுற்று விளங்க, காலை 7-30 மணிக்குப் பங்குக்குரவர் வண. ரி. ஏ. ஜே. மதுரநாயகம் சுவாமியவர்கள் பாடற்பூசை நிறைவேற்றினர். அவ்வேளை சுவாமியவர்கள் தேவநற்கருணையின் திவ்விய மகத்துவத்தை எடுத்துக்காட்டி அப்போது வனாந்தரத்திலே மன்னா பொழிந்தவாறாய் மதுரமான ஓர் பிரசங்கம் செய்தார்.

அன்பின் அரசரை ஆடம்பரபவனியாக அழைத்துச்செல்வதற்கு ஆயத்தமாக வீதிகள்எல்லாம் விசித்திராலங்காரஞ் செய்யப்பட்டிருந்தன. சாயந்தரம் 4 மணிக்கு நான்கு குருமாரும், கன்னியாஸ்திரிமாரும், இப்பங்கைச்சேர்ந்த பலகிராமங்களிலுமிருந்து பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், மற்றும் பெருந்திரளான கிறீஸ்துவர்களும் வந்துகூடிய சமுகத்தில் வவுனியாப் பங்குக்குரவர் வண. எஸ். வேந்தர் கோன் சுவாமியவர்கள் திருமணித்தியால ஆராதனை நடத்தி "என் மாமிசத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவன் என்னில் வசிக்கிறான், நானும் அவனில்வசிக்கிறேன்" என்பதைப் பீடிகையாகக் கொண்டு சீரியதோர் பிரசங்கம்செய்தார்.

# முதல்நன்மையும் உறுதிப்பூசுதலும்

### நாரந்தனை

மகாவந். ஜெறோம் எமிலியானுஸ் பிள்ளை ஆண்டவர் அவர்களுக்குச் சென்ற 16–6–57 ஞாயிறன்று நாரந்தனைக்கிறீஸ்துவர்களால் ஒருமகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது. அன்றுகாலை கட்டளைக்குரவர் வண. பி. வில்லியம் யேசுதாசன்சுவாமிஅவர்கள் அழகுறச் சிங்காரிக்கப்பெற்றிருந்த ஆலயத்திலே திவ்வியபூசை நிறைவேற்றிச் சிறுவர் சிறுமியர்களுக்குத் தமதுகரங்களால் முதல் நன்மைவழங்கினர். திவ்வியபூசை முடிந்தபின் முதல்நன்மைபெற்றபிள்ளைகள் அவரைச்சூழ்ந்துநின்ற மனோகரகாட்சியானது வானின்று இறங்கிவந்த தேவதூதர்கள் சூழ்ந்துநின்ற காட்சியாக அமைந்தது. குரவரின் நல்லுரை, நல்லாசி, நல்லுணவுபெற்று அவர்களெல்லாம் பெருமகிழ்வோடு வீடுதிரும்பினர்கள்.

மாலையாயிற்று. சம்பேதுருவானவர் ஆலயத்திற்கு அண்மையிலுள்ள பெரியவீதியிலிருந்து கோவில்வரை பெரியவர்களும், சிறியவர்களும் திரண்டிருக்க, 4-30 மணிக்கு ஆண்டவர் அவர்கள் பலகுருமார்புடைசூழச் சமுகமானதே மக்களின் ஆனந்தஆரவாரம் அணைகடந்ததாயிற்று. அவர்களின் பூரிப்பைக்கண்ட அவர்வதனத்தில் புன்னகைதவழ்ந்தது. மாணவர் மாணவிகளின் கரங்களிலே கொடிகள் பட்டொளிவீசி அசைந்தாட, எல்லோரும்அணிவகுத்துநின்று அவரை ஆலயத்துக்கு அழைத்துச்சென்றனர். கட்டளைக்குரவர் ஆலயவாயிலில்நின்று ஆசாரமுறைப்படி அவரை வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றார். அதன்மேல் ஆண்டவரவர்கள் ஆசாரியவஸ்திரங்கள் அணிந்து அங்கு நிரைவகுத்துநின்ற நூற்றுக்கணக்கான சிறுவர் சிறுமிகளுக்கு உறுதிப்பூசுதல் நிறைவேற்றிப் பரிசுத்த ஆவியானவரின் கொடைகளால் அவர்களைநிரப்பி அழியாதமுத்திரையைப் பதித்துத் திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதம் அருளினர்.

பின்னர் எல்லோரும் அலங்கரிக்கப்பட்டிருந்த குருமனைமுன்பாகக் கூடியதும் ஆண்டவர்அவர்கள் ஏனைய குரவர்களோடு சிறப்பாக அமைந்திருந்த சிங்காரமேடைமீது ஆசனத்தில் அமர்ந்தனர். நாரந்தனைக்கிராமாதிகாரி எஸ். அல்பிறெட் அவர்கள் மாலையிட்டு அவரை உபசரித்தார். டக்றர் ஜேம்ஸ் நிக்கலஸ் அவர்கள் அன்பளிப்பு வழங்கினர். நாரந்தனைக் கன்னியர்மடத்துமாணவிகளால் படிக்கப்பட்ட வரவேற்புக்கீதங்களும், நாரந்தனை ஆண்பாடசாலைமாணவர்களால் படிக்கப்பட்ட சோபனகீதங்களும் எல்லோரையும் கவர்ந்துகொண்டன. இதைத்தொடர்ந்து நாரந்தனைக் கிறீஸ்துவர்களின்பேரால் ஆசிரியர் எஸ். ஜேம்ஸ்அவர்கள் வாழ்த்துப் பத்திரச்சுருளை அவிழ்த்துப்படித்து ஆண்டவர்அவர்களிடம் சமர்ப்பித்தார். பொற்சருகைபதித்துக் குஞ்சங்களோடுதொங்கிய அவ்வாழ்த்துப் பத்திரச்சுருளைக்கண்ட மக்களுக்குப் பண்டைத்தமிழ்மன்னர் அவையிலே நிற்கிறோமாஎன்ற பிரேமைஏற்பட்டதில் வியப்பில்லை. பின்பு ஆண்டவர் அவர்கள் எழுந்து, ஆற்றிய உருக்கமான சொற்பொழிவு எல்லோர் உள்ளங்களையும் ஈர்ந்தது. "நான்படித்த அந்தக்காலம்— ஓர்சிறுவனாகவிருந்த அந்தக்காலம் இன்றும் நமது மனக்கண்முன்பாக வருகிறது. அக்காலத்தில்வாழ்ந்த இவ்வூர்க்கிறீஸ்துவர்கள் மிகுந்த விசுவாசமுடையவர்களாய் இருந்தார்கள். தினமும் திவ்விய பூசைகாணத்தவறமாட்டார்கள். வீட்டிலிருந்து செபம்சொல்லும்போது கூடக்கோவிலைநோக்கி முழந்தாளிட்டுச் செபிப்பார்கள். அப்போது வாழ்ந்த கிறீஸ்துவர்கள் துன்பமற்றவர்களாகவும், நெருக்கிடையின்றியும் வாழ்ந்தார்கள். ஆனால், நமமுன்நிற்கும் அன்பிற்குரிய சிறுவர் சிறுமிகளே, நீங்கள் உங்கள்முன்னோரைவிட அதிகவிசுவாசம் உள்ளவர்களாய் இருக்கவேண்டும். காரணம் உங்கள் முன்னோர்களுக்கேற்படாத நெருக்கிடை இன்றுஉங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. பெரும்பாரம் உங்கள் தலைமேல் சுமத்தப்பட்டிருக்கிறது. நீங்கள் இச்சுமையைச் சுமந்தே ஆகவேண்டும். இதோநிற்கும் இந்த அறைவீட்டின் தூண்ஒன்று தன்கடமையைச் செய்யாதுவிலகினால் இந்த முழுவீட்டின் கூரைக்குமே அழிவை உண்டுபண்ணும். அதுபோல அருமையான நமதுசிறுபிள்ளைகளே, நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள்கடமையைச்செய்ய ஆயத்தமாகஇருங்கள். உங்களில்ஒருவர்தானும் இன்றுதிருச்சபைக்குள்ள பொறுப்பைச் சுமக்கத் தவறுமிடத்து, அதனால் அழிவையே நாமஎதிர்பார்க்க வேண்டிவரும். நீங்களும் இக்காலஉண்மையைஉணர்ந்து உங்கள்கடமையைச் செய்வீர்கள்என எதிர்பார்க்கின்றோம். பரிசுத்தஆவியாகிய சர்வேசுரன் உங்களுடனே இருப்பாராக" என்று கூறி முடித்தபோது ஆண்டவர்அவர்கள் இன்றைய நிலைமையில் கிறீஸ்துவர்களை எதிர்நோக்கும் இன்னல்களைநினைத்து மிகவும்வேதனை அடைந்துள்ளார்என்பது புலனாகியது.

பின்னர் கட்டளைக்குரவரால் நன்றியுரை கூறப்பட்டது. மாணவிகள் வாழிவிருத்தம்பாடியபின் ஆண்டவர் அவர்களின் திருக்கரஆசிபெற்று மக்கள் தத்தம்இல்லம் ஏகினார்கள்.

சுபம்!

---

பின்னர் மருதமடுத் திருசேத்திர பரிபாலனர் வண. ஜே. சி. செல்வரத்தினம் சுவாமியவர்கள் இருகுருமார் துணைபுரியக் கதிர்ப்பாத்திரத்தைக் காத்தேந்திச் சற்பிரசாதநாதரை வீதியெழுந்தருளச் செய்ததும் பாடகர் குழாம் திவ்விய கீதங்கள் பாடிவர, பக்தர் குழாம் இரு வரிசையாகச் செபங்கள் ஓதிவர, சிறார்கள் புஷ்பாஞ்சலி செய்து நிற்க, சிங்காரமுற்று விளங்கிய வீதிகளினூடாகச் சற்பிரசாதநாதர் திருப்பவனி கொண்டார். குடியிருப்பிலும், கோவிலுக்கு வரும் பெரிய தெருச் சந்தியிலும் அமைக்கப் பெற்றிருந்த அலங்கார பீடங்களிலே திவ்விய நற்கருணையை எழுந்தருளச் செய்து ஆசீர்வாதம் அருளப்பெற்றது. ஈற்றிலே ஆலயத்தில் 'தெதேயும்" என்ற தேவதோத்திர கீதமும், அருள பெற்ற ஆசீர்வாதத்துடன் திருநாள் இனிதே நிறைவாயிற்று. — நிருபர்

## கல்லாற்றுத் தபால்

**அர்ச். ஞானப்பிரகாசியார் திருநாள்:** கல்லாறு, அர்ச். அருளானந்தர் கோவில் பூசைப்பரிசாரகர் சென்ற 21-ந்திகதி வெள்ளிக்கிழமை அர்ச். ஞானப்பிரகாசியார் திருநாளை விமரிசையாகக் கொண்டாடினர். ஆயத்ததினமான 20-ந்திகதி மாலை செபமாலை, பிரார்த்தனையின்பின் பங்குக்குரவர் வேஸ்பர்பாடித் தேவநற்கருணை ஆசீர்வாதம் அருளினர். அதன்மேல் பக்தர்கள் புடைசூழக் கோயிலைச்சூழவரச் சுற்றுப்பிரகாரம்நிகழ்ந்தது. அடுத்தநாட்காலை பாட்டுப் பூசையுடன் திருநாள் இனிதேமுடிவுற்றது. —நிருபர்

## காவலூர்த் தபால்

**அர்ச். அந்தோனியார் திருநாள்:** காவலூர், உதயதிசையில் கோவில்கொண்டிருக்கும் அர்ச். அந்தோனியார்திருநாள் சென்ற 13-6-57 வியாழனன்று சிறப்பாகக்கொண்டாடப்படலாயிற்று. அதற்குமுந்திய பன்னிருதினங்களும் வழமையான திருவிழாக்களால் பரிமளிக்கலாயின. 12-ந் திகதிகாலை புதுமைவரத்தரின் திருச்சுரூபம் உயர்பீடத்தினின்றும் இறக்கப்பெற்று, பக்தர்களின் வணக்கத்துக்குவைக்கப்பட்டது. அன்று அன்னதானமும்நடைபெற்றது. கடைசியான இராஆராதனையிலும், திருநாட்பூசையிலும் கரம்பன், நாரந்தனைமுதலாம் அயற்கிராமங்களிலிருந்தும் பலநூற்றுக்கணக்கானமக்கள் சமுகமளித்திருந்தார்கள். திருச்சுரூப சுற்றுப்பிரகாரத்துடனும், சற்பிரசாத ஆசீர்வாதத்துடனும் திருநாள் இனிதேமுடிவெய்தியது.

**கல்லூரித்தினம்:** காவலூர், அர்ச். அந்தோனியார்கல்லூரி, அந்தோனியார் தமிழ்ப்பாடசாலையாகிய இரண்டினதும் ஆசிரியர்களும், மாணவர்களும் தமதுபாடசாலைகளின் பாதுகாவலராம் அர்ச். அந்தோனியார்திருநாளை வழமைபோலக் குதூகலமாகக் கொண்டாடினார்கள். அன்று கல்லூரி அதிபர் வண. ஜீவரத்தினம் சுவாமியவர்கள் காலை 7-30 மணிக்குத் திவ்விய பூசைப்பலி ஒப்புக்கொடுத்தார். காலை 9 மணியளவில் கல்லூரிமாணவர்களது அக்குயினாஸ், தொன்பொஸ்கோ, சேவியர்இல்லங்களுக்கிடையே வள்ளஓட்டப் போட்டியொன்று நடைபெற்றது. அதில் அக்குயினாஸ்இல்லம் முதலாம் இடமும், பொஸ்கோ இல்லம் இரண்டாம்இடமும், சேவியர்இல்லம் மூன்றாம்இடமும் வகித்தன.

**தண்ணீர்ப்பங்கீடு:** இப்பகுதியிலே தண்ணீர்எங்கும் வற்றிவிட்டது. மக்கள்குடிதண்ணீருக்கு மிகவும்கஷ்டப்படுகிறார்கள். அவர்கள்வெகுதூரம் கால்நடையாகச்சென்று தண்ணீர் சுமந்துவர வேண்டியிருக்கிறது. நாரந்தனையிலிருந்துகிடைக்கும் குழாய்நீரும் நீர்மட்டம்குறைந்து வருவதால் மக்களுக்குக் கட்டுப்பாடாகவே தண்ணீர்ப் பங்கீடுசெய்ய வேண்டுமென்று பட்டினசபை தீர்மானித்துள்ளது. பங்கீடு செய்யப்படும் நீர் சாதாரணபாவனைக்கும்போதாதெனச் சொல்லப்படுகிறது.

— நிருபர்

## நன்றியறிந்த ஸ்தோத்திரங்கள்

எனது பத்தாவுக்கும் சகோதரிக்கும் ஏற்பட்ட கடினநோய் நீங்கியதற்கும், எனது மக்கள்இருவருக்கு வேலைகிடைத்ததற்கும், இன்னும் நான்கேட்ட சகல காரியங்களும் கிடைத்ததற்கும் பரிசுத்தசதாசகாய மாதாவுக்கும், பரிசுத்த சிலுவைக்கும் எனது நன்றியைக் காண்பிக்கின்றேன். எனது குடும்பத்தை மாதாவுக்குக் காணிக்கையாக ஒப்படைக்கிறேன்.

மணப்பாடு, வி. எலிசபேத்து.

* * *

அர்ச். அந்தோனியாரிடம் கேட்டு அடைந்த மூன்றுபெரிய சலுகைகளுக்காக நன்றியறிந்த ஸ்தோத்திரம் உண்டாவதாக. நேர்த்தியின்படி இதைப்பிரசுரிக்கிறேன். மற்றும் எனதுவேண்டுதல்களைப் புறக்கணியாமல் தயவாய்த் தந்தருளும்படி வேண்டுகிறேன்.

கலவியாவ, அருள்பிரகாசம்.

* * *

எனது அன்பார்ந்த சதாசகாய மாதாவே, நான் அடைந்த மூன்றுபெரிய சலுகைகளுக்காக உமக்குப்பகிரங்கமாக நன்றியறிந்த ஸ்தோத்திரம் செலுத்துகிறேன். நேர்த்தியின்படி இதைப் பிரசுரிக்கிறேன். மற்றும் மூன்றுபெரிய சலுகைகளும் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் எதிர்பார்க்கிறேன். கேட்பதை இல்லை என்று தட்டாமல் கொடுக்கும் சதாசகாயமாதாவிடம் எனக்குஎன்றும் நம்பிக்கை உண்டு.

கொம்பனித்தெரு, இராசதுரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாப்பரசருக்குச் சுரபாதுகாப்பு

ஆசியாவில்தோன்றியிருக்கும் இன்புளுவென்சாஎனப்படும் சளிச்சுரத்திலிருந்து பரிசுத்தபாப்பரசரைப் பாதுகாத்துவைக்குமாறு வத்திக்கானிலே சாவதானமிக்க பாதுகாப்புகள் எடுக்கப்பட்டுவருவதாக அங்கிருந்து சென்ற 10-ந்திகதியன்று தந்திச்சமாச்சாரம் கிடைத்துள்ளது. பரிசுத்தபிதா உலக முழுவதிலுமிருந்தே வருடமொன்றுக்குச் சராசரியாகவருகின்ற பத்துலட்சம்மக்களுக்குப் பேட்டியளித்துவருகின்றூர். அதனுல் பாப்பானவருக்குரிய கணையாழியை அணிந்திருக்கும் அவரின் வலதுகரமானது உலகில்மிக அதிகமாக மக்களால் முத்தமிடப்படுகின்றது. தொற்றுநோயிலிருந்து அவரைப்பாதுகாத்துவைக்குமாறு அர்ச். பேதுருவானவர் மகாலயமும், யாத்திரிகர்கள்குழாங்களுக்கு அவர் பேட்டியளிப்பதும், வத்திக்கான்மாளிகையிலுள்ள அவரின் அதிகாரபூர்வமான மேல்மாடிமண்டபமும் தொற்றுநோயணுக்களைப்போக்கும் கிருமிநாசினி மருந்துகொண்டுதெளித்துச் சுத்தமாக்கப்படுகின்றன. ஒவ்வோர் பேட்டியின்பின்னரும் அவரதுகரத்தைத் தொற்றுநோயணுக்களிலிருந்து பாதுகாப்பதற்கு விசேஷகவனம் எடுக்கப்பட்டுவருகிறது. வத்திக்கானில்வேலை செய்யும் 5,000 மக்களிடையே இன்புளுவென்சா குளிர்சுரம் எவருக்குமே கண்டதாக அறிவிக்கப்படவில்லையென்று இத்தாலியஅரசாங்கம் அறிக்கையிட்டிருக்கின்றது.

## அடிமைகளான ஹங்கேரியர்கள்

ஹங்கேரிநாட்டின் கம்யூனிஸ்தபொம்மைஅரசாங்கம் 50,000 ஹங்கேரியதொழிலாளர்களை ருஷியாவுக்கு அடிமைகளாக விற்றிருக்கிறதென்றும், ஒவ்வொருஅடிமைக்கும் கொடுபட்டுள்ளவிலை 375ரூபாவென்றும் வியென்னநகரில் பிரசுரமாகும் "நியூவர் கூறியர்"என்ற மாலைப்பத்திரிகை அறிவித்திருக்கின்றது. இவ்விதம் நாணமற்றவகையிலே அடிமைவியாபாரத்தின் நாகரீகமற்றகாலத்துக்குத் திரும்புவதானது ருஷியாவுக்கும், அதற்கு அடிமையாகியுள்ள ஹங்கேரியஅரசாங்கத்துக்குமே ஒருதொகையான பிரச்சினைகளைத் தீர்ப்பதாயிருக்கும். சோஷலிஸ்தபொருளாதாரத்தின் உண்மையானஅஸ்திபாரமாகிய ருஷியாவின் பிரமாண்டமான அடிமைப்பிரஜைகள் கடந்தபலவருடகாலமாய்ச் சுகாதாரமற்றநிலைமைகளினுலும், பசிபட்டினிக்கேதுவான பங்கீட்டுமுறையினுலும், கடினஉழைப்பினுலும் கெட்டுகொந்தளித்து அதன்கைத்தொழில், கமத்தொழில் வேலைகளைமேற்கொண்டுசெய்யமுடியாதிருப்பதால் அவர்களினிடத்தை இந்த 50,000 ஹங்கேரிய தொழிலாளர்கள் வகிக்கக்கூடியதாயிருப்பதும் ருஷியாவின்பிரச்சினையை ஓரளவிலே தீர்ப்பதாகும். இந்த 50,000 பேரும் சென்ற ஐப்பசியிலே ஹங்கேரியில்நடைபெற்ற சுதந்திரப்புரட்சிக்கலகத்தில் ஈடுபட்டவர்களும், இன்னுமே அந்நாட்டின் தற்போதைய அரசாங்கத்தை எதிர்ப்பவர்களுமான தொழிலாளர்களிடையே திரட்டப்பட்டுள்ளார்கள். பிழைப்பற்றிருக்கும்இவர்களை ருஷியாவுக்கு அனுப்புவதாலே ஹங்கேரியஅரசாங்கத்துக்கு இரத்தக்கிரயமாகப் பெருந்தொகைப்பணம்கிடைப்பதுடன், அதன் உணவுத் தட்டுப்பாடுப் பிரச்சினையும் ஓரளவில்தீருவதாகும். தனதுஆட்சிக்கு மிகவும்அபாயகரமாய் உள்ளவர்களெனக் கருதப்படும்மக்களில் ஒருபகுதியினரை இவ்விதம்வெளியேற்றிவிட்டதாலே ஹங்கேரியஅரசாங்கத்துக்கு மற்றோர்பிரச்சினையும் ஓரளவில் தீர்ந்திருக்கிறது.

## பாப்பரசரும் ஜப்பானியதூதரும்

யுத்தத்திலேஜப்பான் தோல்விகண்டு வீழ்ச்சியுற்றபின் அது திரும்பவும் அடைந்துள்ள மகத்தான அபிவிர்த்திக்குப் பெருமளவிலே பரிசுத்தபிதாவுக்குக் கடமைப்பட்டுள்ளதென்று பரிசுத்தஸ்தானத்தினிடமாக இருந்துவருகின்ற ஜப்பானியதூதுவரான திரு. சென் ஜின் ரிசுறுவோக்கா அவர்கள் அவருக்கு அனுப்பிவைத்துள்ள ஓர் விசேஷநன்றிச்செய்தியிலே தெரிவித்திருக்கின்றூர். அச்செய்தியிலே அவர் தெரிவித்திருப்பதாவது: "முழுஉலகத்தினதும் சமாதானத்துக்கும், சேமவாழ்விற்குமாக அநேகவருடங்களாகப் பரிசுத்தபிதாவாகியதாங்கள் எடுத்துக்கொண்ட அயராமுயற்சிகளை ஜப்பானிய அரசாங்கத்தினரும், ஜப்பானிய மக்களும் கண்ணியமாகக் கௌரவித்துப் பாராட்டுகின்றூர்கள். 2-வது உலகயுத்தம் முடிந்ததின்மேல் ஜப்பானிய யுத்தகைதிகளுக்கு விடுதலைபெற்றுக்கொடுப்பதற்காகப் பாப்பரசர்செய்துள்ளவைகளையெல்லாம் ஜப்பான்ஒருபோதுமே மறந்துபோகமாட்டாது. அணுக்குண்டு, சலவாயுக்குண்டுப்பரீட்சைகளைத் தொடர்ந்துநடத்துவதை எதிர்ப்பதில் ஆத்மீகபலத்தின் பிரதம பரிபாலனரான தங்களையே உலகம் எதிர்நோக்குகின்றது" என்பதே.



# பல தேசங்களில்

## கம்யூனிஸ்தரின்விழுகை

இத்தாலியிலேகம்யூனிஸ்தர்கள் தங்கள்கட்சிக்குரிய அங்கத்துவசீட்டுகளைச் சென்றமாசியிலே புதுப்பிக்கவேண்டியவர்கள்; ஆனுல், அவர்களில் குறைந்தபட்சம் மூன்றுலட்சம் கம்யூனிஸ்தர்கள் அவ்வாறுபுதுப்பிக்கத் தவறிவிட்டார்கள்என்று இத்தாலிய உள்நாட்டுமந்திரியார் திரு. போர்டினன்டோ ரம்புரோனிதெரிவித்திருக்கின்றூர். இத்தாலியிலே கம்யூனிஸ்ததலைவர்கள் தங்கள்கட்சிக்குண்டான இந்தத்தோல்வியை—அதாவது இழத்தலைபிட்டு ஆழ்ந்ததுயரம் காண்பிக்கிறூர்கள்; சென்றஐப்பசிமாதம் நடைபெற்ற ஹங்கேரிய அரசியற்புரட்சிக் கலகங்களோடு ஆரம்பமான இந்தத்தோல்வியாலே இத்தாலிய கம்யூனிஸ்தகட்சியிலிருந்து தலைசிறந்தவர்களும், அதிகம் திறமைவாய்ந்தோருமான அநேகர் விலகிவிட்டார்கள்; இத்தாலியகம்யூனிஸ்தகட்சி நடுத்தரவகுப்பினர்மத்தியிலும், வறியவர்கள்மத்தியிலும் பெற்றிருந்தவிருத்தியைத் தற்சமயம் இழந்துகொண்டு வருகிறது; 20,000 அங்கத்தவர்களைக்கொண்ட போட்டர்களின் தேசியதொழிற்சங்கம் அக்கட்சியின் ஆதீனத்திலிருந்து சமீபத்தில்விலகிச் சுதந்திரமான தொழிற்சங்கமானபோது அதற்குமற்றுமோர் பலத்தஅடிவிழுந்திருக்கிறதென்றும் உள்நாட்டு மந்திரியார் தெரிவித்திருக்கின்றூர்.

## எல்லாரும் உள்ளே

சட்டசபைக்கூட்டங்கள் நடந்துகொண்டிருக்கையில் உள்ளேவரும் பார்வையாளர்களைக் கட்டுப்படுத்தப் பொலிஸ்காரர் சபாமண்டபத்தின்வாயிலிலே காவல்நிற்பது வழக்கம். கேரள சட்டசபைக்கு இத்தகையபந்தோபஸ்து அவசியமில்லையென்று சபாநாயகர்கூறியதன்பேரில் இப்பொழுது அங்கேபொலிஸ்காரர் நிறுத்தப்படுவதில்லை. அவர்களுக்குப்பதிலாக நாலுஆடவர்களையும், இரண்டுபெண்களையுங்கொண்ட ஒருகுழு நியமிக்கப்பட்டுள்ளது. கேரளசட்டசபையில் வரவுசெலவுத்திட்டம்பற்றி விவாதம்நடந்தபோது பேசியவர்களில்ஒருவரான திரு. யோசெவ் சழிக்காட்என்பவர் "கம்யூனிஸ்தர்கள் எல்லாரும்உள்ளேயே இருப்பதால் வாயிலில் பொலிசார்நிற்பது அவசியமில்லை"என்றூர். கலகம்பண்ண எப்பொழுது வாய்ப்புக்கிடைக்குமோவென்று காத்துக்கொண்டிருப்பவர்கள் கம்யூனிஸ்தர்கள். ஆனுல், அவர்கள் இப்பொழுது அங்கத்தினர்களாகச் சட்டசபைக்குள்ளேயே இருக்கின்றூர்கள். அதனுல்தான் வாயிலில் பொலிசார்தேவையில்லையென்று அவர்கூறினூர்போலும். ஆனுல், வெளியேயிருப்பவர்களைவிட உள்ளேயிருப்பவர்கள் நாட்டிற்கு அதிகதெடுதி விளைவிக்கக்கூடும். இதுவரையில் சட்டவிரோதமாகக் கருதப்பட்டுவந்தவற்றை இவர்கள் சட்டஆதாரமுள்ளனவாக மாற்றிவிடக்கூடும். சட்டசபையில் சிவப்பர்களுக்குப் பெரும்பான்மைப்பலம் கிடைத்ததற்குப் பொறுப்பாளிகளாயுள்ள கேரளமக்கள் இனிச்சர்வசாக்கிரதையாக இருந்துவருவது அவசியம்.

## மீண்டும் உலகயுத்தமா ?

அடுத்த ஐந்துஆண்டுகாலத்தில் மற்றோர்உலகயுத்தம் வரக்கூடியபோபாயம் இருப்பதாக அமெரிக்கபேராசிரியர் ஸ்கொட் நியாயங்அவர்கள் சென்ற 18-ந்திகதி பங்களூரில்பேசியபோது எச்சரித்திருக்கின்றூர். "சமாதானத்துக்கு மூன்றுமடங்கு சந்தர்ப்பங்கள் இருந்தால் யுத்தத்துக்குப் 17மடங்கு சந்தர்ப்பங்கள் இருக்கின்றன; கடந்த நாற்பதுவருடங்களில் பொதுயுத்தங்களுக்குக் காரணமாயிருந்த அதே முரண்பாடுகளும், போராட்டங்களும் மீண்டும் தலையெடுக்கின்றன; அந்த யுத்தங்களைநடத்திய அதேஸ்தாபனங்கள் மீண்டும்தலைகாட்டுகின்றன; எனவே, அதேகாரணங்களிலிருந்து அதேவிளைவுகள் ஏற்படும்; இதுமுக்காலும்உண்மை; இந்த அனர்த்தம் நேராது தடுக்கவேண்டும்"என்று ஆசியாவிலும், ஐரோப்பாவிலும் தமது சுற்றுப்பிரயாணத்தை முடித்துக்கொண்டுதிரும்பிய இந்தப்பேராசிரியர் கூறுகின்றூர்.

* * *

● லூர்துபதி நூற்றூண்டுவிழாவருடத்திலே பாப்பரசர் அப்பதியைத்தரிசிக்கத் திட்டமிட்டிருக்கிறூரென்பதை வத்திக்கான்அதிகாரிகள் மறுத்திருக்கின்றூர்கள். அவரின்விருத்தாப்பியமும், லூர்துபதியிலே அவரின்பரிவாரங்களுக்குப் போதியதங்குவசதிகள் கிடையாமையுமே இதுவிஷயமாய்க் கொடுபட்டுள்ள நியாயங்களாகும். ஆனுல், லூர்துபதிநூற்றூண்டின் ஞாபகார்த்தமாக வத்திக்கான்தபாற்கந்தோர் சில விசேஷஇனமான புதியதபால்முத்திரைகளைப் பாவனைக்குவிடவிருக்கிறது.

● தீபேத்தை ஓர்கம்யூனிஸ்தநாடாகச்செய்யத் தான் எடுத்துக்கொண்டமுயற்சி படுதோல்வி அடைந்துவிட்டதென்பதைச் செஞ்சீனு ஒப்புக்கொண்டிருக்கிறது. தீபேத்தில் ஜனநாயக சீர்திருத்ததிட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவருவதைத் தற்காலிகமாக நிறுத்திவைத்திருப்பதாகச் செஞ்சீன ஜனுதிபதிமோசிதுங் செஞ்சீனுவின் பிரதமஅரசாங்கசபையில் தெரிவித்திருக்கின்றூர்.

● உலகின்மிகப்பெரிய விசாரணைப் பங்குகளில்ஒன்று வடசமுத்திரத்தையடுத்து நவமாகவகுக்கப்பட்டிருக்கிறது. இது ஆயிரம்மைல்விஸ்தீரணமுள்ளதும், ஐயாயிரம்கத்தோலிக்கரை அடக்கியதுமாகும். அமலோற்பவ மரியநாயகிசபையைச்சேர்ந்த இதன் பங்குக்குரவரான வண. பி. ஏ. லெசாட் சுவாமியார்ஆங்காங்கு அவர்களைஞான விசாரணைசெய்ய விமானங்களில் சென்று பலமுறைகளிலும் கூடாரங்களில் படுத்துறங்குகிறூர்.

## அர்ச். பிரான்சீஸ் சவேரியார் இலங்கைக்கு வந்தாரா ?

கிழக்கிந்தியதேசங்களின் பெரிய அப்போஸ்தலராகிய அர்ச். பிரான்சீஸ் சவேரியார் இலங்கைக்கு வந்தாரா? இல்லையா? என்பதைப்பற்றி நமக்குள்ள ஐயுறவைத் தீர்க்கக்கூடிய நூல் ஒன்று சீக்கிரத்திலே ஆங்கிலமொழியில் வெளியாகும். யேசுசபையைச் சேர்ந்த வண. ஜோர்ஜ் ஸ்கூர்கமர் சுவாமியார் சவேரியாரின் வரலாறுகளை ஆராய்ந்து ஜேர்மன்மொழியில் பிரசுரித்தபுத்தகத்தின் மொழிபெயர்ப்பே விரைவில் வெளியாகப்போகும் அந்தநூல்.

உலகிலுள்ள பல்வேறு நாடுகளில், பல்வேறு மொழிகளில் சவேரியாரைப் பற்றி எழுதப்பட்டுள்ள பலநூல்களை நன்குபடித்தறிந்து சுவாமியார் கூறுவதாவது :

பிரான்சீஸ்சவேரியார் நான்குமுறை இலங்கைக்கு விஜயம்செய்தார். அவற்றுள் மூன்று தரிசனைகளுக்கு வரலாற்று ஆதாரங்கள் உண்டு. நான்காவது தரிசனை அநேகமாக நடந்ததென உத்தேசிக்க இடமுண்டு.

கொச்சியில் இருந்த பிரதிநிதியான அல்போன்சோ டி சொறங்கா 1552-ம் ஆண்டு தைமாதம் 27-ந் திகதி ஆங்கிலேயமன்னன் மூன்றுவது ஜோணுக்கு எழுதியகடிதத்தில் உள்ளவிபரமாவது :

சவேரியார் 1544-ம் ஆண்டு அரசனின் கடிதமொன்றைப் புவனேகபாகுவுக்குக் கொடுக்கக் கொழும்புக்கும், கோட்டைக்கும் போயிருக்கிறூர்.

சவேரியார் 1545-ம் ஆண்டு கப்பல் மார்க்கமாகக் கொச்சியில்இருந்து நாகபட்டணம் போகும்வழியில் கொழும்பில் இறங்கினூர். இவ்வரலாற்றை அவர் பிரயாணம்செய்த கப்பலின் தண்டையல் தனதுமேலதிகாரிகளுக்கு அறிவித்தார். தான் சவேரியாரால் மனந்திருப்பப்பட்டதாகவும் இவர்கூறியுள்ளார். இதேசம்பவத்தை 1546-ம் ஆண்டு யோ ஆ ஓடேயிரோ என்பவர் ஓர் கடிதமூலம் அறிவித்துள்ளார்.

மிகுவேல் பெர்னுண்டஸ் என்னும் ஒருவர் 1556-ம் ஆண்டு கோவையில் அறிக்கையிட்டதாவது : மலாக்காவில் இருந்து திரும்பிவருகையில் சவேரியார் காலிநகரில் என்னைச் சந்தித்து எனக்குஉண்டாயிருந்த வருத்தத்தைக் குணமாக்கி எனக்காகப் பூசை நிறைவேற்றினூர். மேற்படிதரிசனை 1552-ம் ஆண்டு தைமாதம் 24-ந் தேதி நடந்திருக்கலாமென உத்தேசிக்கப்படுகிறது.

கடைசியாக 1548-ம் ஆண்டு தைமாதம் சவேரியார் பிரயாணஞ்செய்த கப்பல் மலாக்காவில்இருந்து கொச்சிக்குத் திரும்பிவருகையில் கொழும்பில் தங்கியிருக்கலாமென்று உத்தேசிக்க இடமுண்டு.

---

● சாதாரணகடல்நீரில் மறைந்துகிடக்கும் உஷ்ணத்தைக்கொண்டு யந்திரங்களை இயக்கமுடியுமென்று ஐக்கியநாடுகளின் ஸ்தாபன விசேஷஅறிக்கைஒன்று தெரிவித்துள்ளது. பொருளாதார சமூகசபைக்கென்று தயாரிக்கப்பட்டுள்ள இந்த அறிக்கையிலே இறுதியில் கடல்நீரிலிருந்து 7,000 கிளோவாற்ஸ் மின்சாரசக்தியைஉண்டுபண்ணமுடியுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

● பாப்பரசரின் பெயர்கொண்ட பாதுகாவலரான அர்ச். ஈயூஜினின் திருநாள் அன்றுஞாயிற்றுக்கிழமை வந்தபோது வத்திக்கானில் கொடிகளேற்றிப் பறக்கவிடப்பட்டிருந்தன. அன்றுகாலைஅவர் 5,000யாத்திரிகர்களுக்குப் பொதுப்பேட்டி அருளினூர். உருமத்தின்போது மேல்மாடிக்குச் சென்று அர்ச். பேதுருவானவர் மகாதேவாலய சதுக்கத்தில் குழுமிநின்ற 10,000மக்களை ஆசீர்வதிக்கலாயினூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டளை விபரம்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டில் M. 675-ம் இலக்கத்தில் கந்தர்மடம்குடி சின்னத்தம்பி கைம்பெண் இராசபிள்ளை வழக்காளியாக, யாழ்ப்பாணத்திலிருக்கும் "யாழ்நகர் கஷ்டநிவாரண பாதுகாப்புச் சங்கத்" தின் தலைவர் விசுவநாதர் யோசேப்பு மனுவல்பிள்ளை 1-ம் எதிரியாகவும், தனதிகாரி கதிரவேலு சூசைப்பிள்ளை 2-ம் எதிரியாகவும், இணைக்காரியதரிசிகள் மரியாம்பிள்ளை கிறிசோஸ்தம் பொன்னுத்துரை 3-ம் எதிரியாகவும், சி. த. தம்பிராசா 4-ம் எதிரியாகவும் தனது சகோதரன் காலஞ்சென்ற வல்லிபுரம் பொன்னுத்துரை ஓர் அங்கத்தவராய் இருந்தபடியால் அவருக்குச்சேரவேண்டிய உதவிப் பணம் ரூபா 1450/. மேற்படிசங்கத்திலிருந்து அறவிட்டுக் கொள்ளும்படி ஷை இலக்கத்தில் வழக்குத் தொடர்ந்து ஷை 1-ம், 2-ம், 3-ம், 4-ம் எதிரிகளுக்கு 23-7-57-ல் ஷை கோட்டில் வெளிப்பட்டு மறுமொழி சொல்லும்படி கட்டளையிடப்பட்டிருக்கிறது.

ஆகையால், ஷை சங்கத்தின் அங்கத்தவர்களும் இன்னும் ஷை பிராதில் தொடர்பு உடையோர் எவராவது 23-7-57 காலை 10 மணிக்கு ஷை கோட்டில் வெளிப்பட்டுத் தங்களுக்கு ஏதாவது பிசகு தடையிருப்பின் வெளிப்படுத்தும்படி இத்தால் கட்டளையிடப்பட்டிருக்கிறது.

1957-ம் ஆண்டு ஆனி மாதம் 20-ம் திகதி

கோட்டுக்கட்டளைப்படி

**K. A. Sebastian.**

சக்கிடுத்தார்

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 1105.**

**அச்சுவேலி**

(1) அல்பேட் லிஓனெல் பெனடிக்றும்,
(2) பெண் மேரி பிலோமினாவும்
— வழக்காளிகள்

எதிராக

**புத்தூர்**

(1) அருணசலம் கனகசபை முத்துக்குமாரும்,

**உடுப்பிட்டி**

(2) செதுங்கமாப்பாணர் இராசா அல்லது தம்பு இராசா அல்லது சிவப்பிரகாசமும் — எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக்கோட்டின் M. B. 1105-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணி 1957ஞு ஆடிமீ 25உ வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை : முதல்வட்டி ரூபா 1643/-ம். இன்னும் ரூபா 1000/-த்திற்கு 11-7-56 தொடக்கம் 10-10-56 வரைக்கும் 8 வீத வட்டியும் அதற்குப்பின்னால் கூட்டுத்தொகைக்கு இறுபடும்வரைக்கும் 5வீத வட்டியும். கோட்டுச்செலவு ரூபா 185-49.

### காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப்பகுதி புத்தூர்க் கோவிற்பற்று, புத்தூர் தெற்கு இறைக்கிட்டுவன்தனை. பர. நில. இலா. 10. கிணறும், செய்பயிர் வான்பயிர்களும். எல்லை : கிழக்கு — சந்திரசேகரம் தாமோதரம் பிள்ளையின் ஆதனம். வடக்கு — கனகசபை முத்துக்குமாரு பெண் அபிராமிப் பிள்ளையின் ஆதனம். மேற்கு—ஒழுங்கை. தெற்கு—முதலாம்எதிரி கனகசபை முத்துக்குமாருவின் ஆதனம்.

24 சப்பெல்வீதி, யாழ்ப்பாணம். **செ. இரத்தினசபாபதி,** கொம்மிஷனர்.

21-6-57

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

பரிசுத்த சதாசகாய மாதாவே! நான் உம்மிடத்தில் இரந்து கேட்டதின்படி பரீட்சையில் சித்தியெய்திவிட்ட படியாலும், நான் கேட்டகாரியம் அனுகூலமானதினாலும் உமக்கு ஸ்தோத்திரம் கூறி நேர்த்தியின்படி இதைப் பிரசுரிக்கிறேன். உமது நாமம் மேன்மேலும் புகழப்படக் கடவதாக.

குருக்கள்மடம், C. பிலிப்.




# தயிரும் மோரும்

பால் மனிதருக்கு அமிர்தம்போன்ற உணவாகும். ஆனால், வெப்பம்மிகுந்த நமதுநாட்டில் பால்விரைவாகக் கெட்டுப்போகிறது. பால் கெட்டுப்போனால் நச்சுத்தன்மை அடைகிறது. கெட்ட பாலை அருந்தினால் உடமபுக்குப் பல விதநோய்கள் உண்டாகின்றன.

நம்முன்னோர்கள் பாலை ஆரோக்கிய உணவாக உபயோகப்படுத்தக் கற்றுக் கொண்டார்கள். அதாவது, பாலைத் தயிராக்கும்விதத்தைக் கற்றுக்கொண்டார்கள். பாலைத்தயிராக்கிச் சாப்பிட்டால் உடம்புக்குப் பலவிதநன்மைகள் உண்டாகின்றன. பாலைக் காய்ச்சி உறையிட்டால் அதில் ஒரு விதமான அணுக்கிருமிகள் உண்டாகித் தயிராக மாறிப் புளிப்புச்சுவை ஏற்படுகிறது. உடம்புக்கு நன்மைசெய்கிற இந்த அணுக்கிருமிகள் தேகசுகத்துக்குத் தீமைசெய்கிற அணுக்கிருமிகளை வரவொட்டாமல் தடுக்கின்றன. குளிரான நாடுகளில் இவ்வாறு பாலைத்தயிராகச் செய்ய முடியாது. வெப்பமுள்ள நாடாகிய நமதுநாட்டிற்குத் தயிர் ஆரோக்கியத்தைத்தருகிற நல்லஉணவாகும்.

### புளித்த தயிரின் குணம்

பாலைத் தயிராக்குவதினால், பாலில் இருக்கிற உணவுச்சத்துகள் ஒன்றும் குறைகிறதில்லை. ஆனால், பாலில்இல்லாத வேறுநல்லகுணங்கள் தயிரில் இருக்கின்றன. கண்பார்வைக்கு நன்மைதருகிறதும், தொற்றுநோய்களைத் தடுக்கிறதுமான உயிர்ச்சத்து (ஏ. விற்றமின்) உள்ள வெண்ணெய் பாலில்இருக்கிறது. எலும்புகளையும், பற்களையும்வளர்க்கிற கல்சியம்என்னும் சுண்ணும்புச்சத்தும், தேகவளர்ச்சிக்கு உதவிசெய்கிற பொஸ்பறஸ் என்னும கந்தகச்சத்தும் பாலில் இருக்கின்றன. தசையைவளர்க்கிற உயிர்ச்சத்துக்கூட (பி. விற்றமின்) இதில் சிறிதுஉண்டு. பாலில்இருக்கிற இந்தஉயிர்ச்சத்துகள் எல்லாம் சிறிதும்கெடாமல் தயிரிலும் இருக்கின்றன. அன்றியும் புளித்த தயிருக்குத் தேகஆரோக்கியத்தையும், நீண்டஆயுளையும் கொடுக்கிற குணம் உண்டு. மேல்நாட்டுவைத்தியர்களும் ஆராய்ச்சி செய்துபார்த்து இது உண்மைஎன்பதை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

வைத்தியநூல்களைத் தமிழில்எழுதிய தேரையர்என்னும் சித்தர் தமது நோயணுகாவிதிஎன்னும் பாடல்களில் புளித்ததயிர் உண்போம்என்று சொல்லியிருக்கிறார். அன்றியும், தயிராகச் சாப்பிடுவதைவிட மோராகச் சாப்பிடுவது நல்லதென்றும் கூறியிருக்கிறார். "மோர்பெருக்கி, நீர்கருக்கி, நெய்யுருக்கி உண்பவர்தம் பேரை உரைக்கில் போமேபிணி" என்று கூறியிருக்கிறார். அதாவது, தயிரை மோராகச்செய்து உண்ண வேண்டும் என்றும், நீரைக்காய்ச்சிக் குடிக்க வேண்டும்என்றும், நெய்யை உருக்கி உணவோடு உண்ணவேண்டும் என்றும் கூறுகிறார்.

### நீண்டஆயுள்தரும் மோர்

தயிரை மோராகக் கடைந்துவிட்டாலும் தயிரில்உள்ள எல்லாச்சீவசத்துகளும் மோரில் இருக்கின்றன. வெண்ணெயை எடுத்துவிட்டால் அந்தச் சத்துமட்டும் இருக்காது.

சென்னைபோன்ற நகரங்களிலே பாலைத் தயிராக்காமல் பாலிலிருந்தே வெண்ணெய் எடுத்துவிட்டு, வெண்ணெய்எடுத்தபாலைத் தயிராக்கிவிற்கிறார்கள். இந்தத்தயிர் சுவையற்றிருந்தாலும், நெய்ச்சத்துத்தவிர மற்றெல்லாச் சத்துக்களும் இதில் கெடாமலிருக்கின்றன.

பசுத்தயிரில் இருப்பதுபோலவே எருமைத் தயிரிலும் எல்லாச்சத்துக்களும் இருக்கின்றன. ஆனால், பசுத்தயிரிலுள்ள வெண்ணெயைவிட இருமடங்குவெண்ணெய் எருமைத்தயிரில் உண்டு. ஆகவே, எருமைவெண்ணெயில் அதிகநெய் கிடைக்கிறது.

புளித்ததயிரில் நீர்விட்டுக்கடைந்து மோராக்கிஉண்பது நல்லது என்று சொன்னோம். மோர் சீரணசக்தியை உண்டாக்குவதோடு நீண்டநாள் வாழச்செய்கிறது. நம்முன்னோர்கள் நீண்டநாள்வாழ்ந்து வயோதிபகாலத்திலும் சுகதேகத்தோடு இருந்ததற்குக் காரணம் என்னவென்றால், அவர்கள் தயிரையும், மோரையும் அதிகமாகச் சாப்பிட்டதுதான். தினந்தோறும் மோரைக் குடித்துவந்தால் தேகாரோக்கியம் உண்டாகும். சாப்பிட்டபிறகு கடைசியில் மோர்ச்சாதமும், மோரும் அருந்துவது நல்லபழக்கம். இப்படிச் செய்வது சீரணசக்தியை உண்டாக்கி ஆரோக்கியத்தைத் தருகிறது. இரவு உணவிலும் மோர்சேர்த்துக்கொள்வது நலம்.

### அமெரிக்கரின் பழக்கம்

காப்பியையும், தேநீரையும் காலையில் சுடச்சுடக் குடித்துப்பழகிய நவீன நாகரீகர்கள் காலையில் மோர்குடிக்க விரும்பமாட்டார்கள். ஆனால், அவர்கள் பகற்சாப்பாட்டுடன் மோர் சேர்த்துக்கொள்ளலாம். காப்பியும், தேநீரும் குடித்துப்பழகாத கிராமவாசிகளும், மற்றவர்களும் காலையில்மோர் குடிப்பதை விடக்கூடாது. பணம் பெருத்த ஐக்கிய அமெரிக்கதேசத்திலே காலைவேளையில் ஒவ்வொருவரும் ஒரு கிளாஸ் தோடம்பழச்சாறு அருந்துகிறார்களாம். நமது வறியநாட்டில் எல்லோரும் தோடம்பழச்சாறு அருந்தமுடியாது. ஆனால், அதை விடச் சிறந்தசத்துள்ள பானத்தை அருந்தலாம். அது என்னவென்றால், மோரில் எலுமிச்சம்பழத்தைப் பிழிந்து சாப்பிடுவதுதான். மோரில் இரத்தத்தைச் சுத்திசெய்கிற சீவசத்து (சி. விற்றமின்) கிடையாது. ஆனால், அந்தச்சீவசத்து எலுமிச்சம்பழச்சாற்றில் இருக்கிறது. ஆகவே, மோருடன் எலுமிச்சம்பழச் சாற்றைக் கலந்து குடிப்பது மிகமிகநல்லது. சாப்பாட்டிலும் இதைஉபயோகிக்கலாம்.

### சத்துள்ள ஆகாரம்

பாலானாலும், தயிரானாலும், மோரானாலும் இவைகளில் நல்ல உணவுச் சத்துகள் இருக்கவேண்டுமானால், பசுக்களும், எருமைகளும் நல்ல சத்துள்ள ஆகாரத்தைச் சாப்பிடவேண்டும். பசுக்களும், எருமைகளும் பச்சைப்புல்லையும், பச்சை இலைதழைகளையும் அதிகமாகஉண்ணவேண்டும். பச்சைப்புல், இலைதழைகளைத் தின்கிற மாடுகளின் பாலிலும், தயிரிலும் அதிகமான வெண்ணெயும், நல்ல சீவசத்துகளும் நிறைந்திருக்கின்றன. காய்ந்த வைக்கோல், பிண்ணாக்கு, பொட்டு முதலியவைகளைத் தின்கிறமாடுகளின் பாலிலும், தயிரிலும் அதிகமான நல்ல சத்துக்கள் இருப்பதில்லை. இதனால் தான் சென்னைபட்டணத்தில் இருக்கிற பசுக்களின் பாலைவிடக் கிராமங்களில் இருக்கிற பசுக்களின்பால் உருசியாகவும், சத்துள்ளதாகவும் இருக்கிறது.

## கடற்படை வேலைநீக்கம்

திரிகோணமலைக்கடற்படைத்தொழிலாளரான 500 பேருக்குச் சென்ற ஞாயிற்றுக்கிழமை வேலைநீக்க அறிவித்தல் கொடுபட்டிருக்கிறது. இவர்களிலே 25 கிளாக்குமாரும் அடங்கியுள்ளனர். வேலைநீக்கஞ் செய்யப்படுவோருக்குப் பிறவேலைகள்கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச்செய்வதில் அரசாங்கத்துக்கு உதவிசெய்வதாகக் கடற்படை அதிகாரிகள் கூறியிருக்கிறார்களாம்.

## கட்சியிலிருந்து விலகினர்

பாராளுமன்றத்திலே பொத்துவில் பிரதிநிதியான ஜனாப் எம். எம். முஸ்தப்பா சமஷ்டிக்கட்சியிலிருந்து விலகியிருக்கின்றார். சமஷ்டிக்கட்சியின் ஆவணிமாதச் சத்தியாக்கிரக இயக்கத்தினால் மொழிப்பிரச்சினைக்குக் கண்ணியமான ஓர்முடிவுகாணும் முயற்சிக்குப் பெரும்பாதகம் நேரிடுமென்று தான்கருதுவதாக அவர் தனதுஇராசினாமாக்கடிதத்தில் தெரிவித்திருக்கின்றார். சமஷ்டிக்கட்சியிலிருந்து விலகிவிட்டபோதிலும் தான் அரசாங்கபாராளுமன்ற கட்சியில் சேரப்போவதில்லையென்றும், மற்றவர்களைப்போலவே தனதுமொழியான தமிழ்மொழிக்காகத் தான்தொடர்ந்து போராடவிருப்பதாகவும் அவர்கூறுகின்றார்.

## பாடசாலைகளின் சுகாதாரப்போட்டி

சென்ற ஆனிமாசம் 22-ந் திகதி சனிக்கிழமை காங்கேசன்துறைப் பட்டினசபையால் நடத்தப்பட்டசுகாதார விளையாட்டுப்போட்டியிலே மயிலிட்டிக் கத்தோலிக்கபாடசாலை பாட்டிலும், நடனத்திலும் முதலாவதாகவும், நடிப்பில் இரண்டாவதாகவும் வெற்றியீட்டியதோடு, சென்றஆண்டு அச்சபையால் அளிக்கப்பட்ட வெற்றிக் கேடயத்தைத் திரும்ப நிலைப்படுத்திக் கொண்டதாகவும் அறிகின்றோம்.

## அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ்சபை

அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ்சபை மாதாந்தகூட்டம இம்மதி 27-ம் தேதி பி. ப. 4-15 மணிக்கு அர்ச். சூசையப்பர் சிற்றாலயத்தில் நடைபெறும். அங்கத்தவர்கள் நேரகாலத்தோடு சமூகமாயிருக்கும்படி வெகு விநயமாய்க் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

A. S. FRANCIS OF MARY,
சபைக்கர்த்தருக்காக

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, June 27-1957.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org